
# 2015

# வருடாந்த தறிக்கை





## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்

# நோக்கு

**நாட்டில் முதன்மை வாய்ந்த**

**அந்நிய செலாவணி ஈட்டும்**

**தாபனங்களில் ஒன்றாக விளங்குதல்**



# பணி

**தாபனம் பெற்றுக்கொள்ளக்கூடிய**

**அனைத்து பாரமான கனிப்பொருள்**

**கொண்ட கடற்கரை மணல்**

**வகைகளினதும் வேறு இயற்கை**

**வளங்களினதும் பெறுமதியை**

**உச்சப்படுத்துதல்**

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தாபனத் தகவல்கள் | 01 – 02 |
| தகுதிவாய்ந்த அதிகாரியின் செய்தி | 03 |
| தகுதிவாய்ந்த அதிகாரியின் அறிக்கை | 04 – 08 |
| முக்கிய நிதிசார் தகவல்கள் | 09 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை | 10 |
| சுயேச்சைக் கணக்காய்வாளரின் அறிக்கை | 11 – 12 |
| நிதிக் கூற்றுக்கள் | 13 – 36 |

# தாபனத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | இலங்கை கனிப்பொருள் மணல் விமிடட |
| சட்ட அமைப்பு | : | இலங்கை அரசாங்கத்திற்கு முற்றிலும் சொந்தமான வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும். |
| நிறுவன பதிவு இல | : | PB 587 |
| பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் | : | இல. 341/21, சரண மாவத்தை, இராஜகிரிய |
| தகுதிவாய்ந்த அதிகாரி | : | திரு. ரீ. அசோக்க பீரிஸ்<br>B.A. Hons பொருளியல் (பேராதெணிய)<br>M.S.S.C (களனி) |
| முகாமைத்துவக் குழு | : | திரு. எஸ். ஞானேஸ்வரம் - பிரதிப் பொது முகாமையாளர் (பொறி/செயற்பாடுகள்)<br>B.Sc. Eng., உறுப்பினர்-பொறியியலாளர் நிறுவகம் |
| | | திரு. ஐ.ஜீ.எல். குமார - பதில் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்)<br>B.Sc. |
| | | திருமதி டப்ளியூ.கே. தமாரா - பதில் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)<br>L.I.C.A., APFA |
| | | திரு. எம்.ஏ.ஐ.ஜீ. ஜயதிலக்க - பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்<br>L.I.C.A. |
| | | திரு. ஜீ. மதுரஆரச்சி - வழங்கல் முகாமையாளர்<br>B.Sc. (Mgt), DPMM |
| | | திரு. பி.பீ.எம். விஜேபண்டார - சந்தைப்படுத்தல் முகாமையாளர்<br>B.Sc |

# தாபனத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| கணக்காய்வாளர்கள் | : | சிசில் அரசகுலரத்ன அன்ட் கம்பனி,<br>பட்டயக் கணக்காளர்கள்<br>இல. 8/67, ஸ்ரீ சித்தார்த்த வீதி, கிருலப்பனை,<br>கொழும்பு – 05 |
| வங்கியாளர்கள் | : | இலங்கை வங்கி<br>மக்கள் வங்கி<br>ஹற்றன் நஷனல் வங்கி |
| செயலாளர்கள் | : | பீ.டப்ளியு. கோப்பரேட் செக்ரடேரியல் (தனியார்) லிமிடட்,<br>3/17, கின்சி வீதி,<br>கொழும்பு– 08 |

# தகுதி வாய்ந்த அதிகாரியின் செய்தி

2015ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கையினை முன்வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கை அரசாங்கத்திற்கு முற்றிலும் சொந்தமாக்கப்பட்ட ஒரு நிறுவனமான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட் 1957ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பழைமை வாய்ந்த கூட்டுத்தாபனங்களில் ஒன்றான சிலோன் கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தின் பின் 1992இல் லிமிடட்டாக மாற்றம் பெற்றது. பாரமான கனிப்பொருள் கொண்ட மணல் வகைகளை அகழ்தல், பிரித்தெடுத்தல், சந்தைப்படுத்தல் என்பன நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இலங்கை கனிப்பொருள் லிமிடட் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கண்காணிப்பின் கீழுள்ள மிகவும் வெற்றிகரமிக்க ஒரு அமைப்பாகும்.

457 மி.ரூபா வரிக்கு பின்னரான இலாபத்திற்கு காரணமான 2015ஆம் ஆண்டில் 1,688 மி. ரூபா பெறுமதிக்கு விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டது.

பங்கிலாபமாக 158.5 மில்லியன் ரூபா நிறுவனத்தினால் திறைசேரிக்கு செலுத்த முடிந்தது.

வருட இறுதியில் ஆளணிவலு 847ஆக இருந்தது. தத்தமது பணிக்குரிய துறைகளில் மாத்திமன்றி உற்பத்தித்திறன், சாதகமான மனப்பாங்கு போன்றவற்றை விருத்தி செய்வதற்காக பணிக்குழாத்தினரை பயிற்றுவிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு உள்ளது. எல்லா மூன்று வேலைத் தளங்களிலும் முழுப் பணிக் குழாத்தினருக்காகவும் பயிற்சிப் பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் மாதாந்தச் செலவு 100 மில்லியன் ரூபாவாகும். 2016ஆம் ஆண்டின் இறுதியில் இத்தொகையினை 70 மில்லியன் வரை குறைப்பதற்கும் காசு வைப்பினை 01 பில்லியன் ரூபா வரை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய தரம் உயர்த்தப்பட்ட பொறித்தொகுதி ஒன்றினை நிறுவுவதற்காக கோக்கிளாயில் காணியொன்றினைச் சுவீகரித்துக் கொண்டமை ஒரு முக்கியமான முன்னேற்றப்படியாகும்.

தலைமை அலுவலகம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான நீண்ட கால தேவையினை நிவர்த்தி செய்து கொள்வதற்கான முதற்படியாக நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து நீண்ட கால குத்தகை முறைப்படி இராஜகிரிய, சரண மாவத்தையில் பெற்றுக் கொள்ளப்பட்ட காணியில் புதிய தலைமை அலுவலகத்தைக் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கட்டுமானப் பணிகளை கூடிய விரைவில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்கள், செயலாளர் அவர்கள், பணிக்குழாத்தினர் மற்றும் பொதுத் திறைசேறி ஆகியோரால் வழங்கப்படும் தொடர்ச்சியான ஆதரவும் உற்சாகமும் பெரிதும் பாராட்டுக்குரியவை ஆகும்.

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் எல்லா தரத்திலும் உள்ள எல்லா ஊழியர்களுக்கும் அவர்களது இடையறா ஆதரவிற்கு நான் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ரீ. அசோக பீரிஸ்,
தகுதிவாய்ந்த அதிகாரி

# புல்மோட்டையில் கட்டுமானப் பணிகள்

(i) வைத்திய நிலையம், கேட்போர் கூடம் மற்றும் சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றிற்காகக் கட்டப்பட்ட கட்டடம்





(ii) கட்டப்பட்ட 36 அலகுகளைக் கொண்ட திருமணமாகாதோர் குவாட்டர்ஸ்



(iii) 12 அலகுகளைக் கொண்ட பணிக்குழாத்தினருக்கான குவாட்டர்ஸ் நிர்மாணப் பணிகள்



(iv) கடல் நீர் பம்பியிலிருந்து பகுதி ''A'' ஈர ஈர்ப்பு மேம்படுத்தல் பொறித்தொகுதிக்கு கடல்நீர் டிரான்ஸ்மிஷன் லைனிற்கான P.E குழாய்களை அமைத்தல்



(v) புல்மோட்டை, I.R.Z. பொறித்தொகுதிக்கு யான் ஓயா நீரேந்தியிலிருந்து மூல நீர் டிரான்ஸ்மிஷன் லைனிற்கான P.E குழாய்களை அமைத்தல்





(vi) கொள்கலன்களுக்குள் இல்மனைற்றை மொத்தமாக ஏற்றுவதற்கு இ.க.ம. லிமிடட்டின் இயந்திரவியல் பட்டறையினால் உருவாக்கப்பட்ட அசையும் கன்வேயர்







# தகுதிவாய்ந்த அதிகாரியின் அறிக்கை

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் பணிப்பாளர்களால் 2015 திசெம்பர் 31ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தமது அறிக்கையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களும் கணக்காய்வு அறிக்கையும் இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

## பிரதான செயற்பாடுகள்

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் கூட்டுத்தாபன சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்க - ங்களுக்கு அமைய பின்வரும் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. பாரமான கனிப்பொருள் கொண்ட மணல் வகைகளை அகழ்தல், பிரித்தெடுத்தல், சுத்திகரித்தல் பதப்படுத்தல் போன்றன.

2. கரையோர பாரமான கனிப்பொருள் கொண்ட மணலைப் பயன்படுத்தி வர்த்தக அல்லது கைத்தொழில் பெறுமதி மிக்க பொருட்கள் அல்லது அதன் மூலம் உற்பத்தி செய்யத்தக்க ஏதேனும் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்

3. கரையோர பாரமான கனிப்பொருள் கொண்ட மணலைச் சுத்திகரிக்கும் போது அல்லது பதப்படுத்தலின் போது ஏற்படும் பெறுபேறாக ஏதேனும் உப உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல

## உற்பத்தி

ஆண்டுக்கான உற்பத்திகளின் விபரங்கள் மெ. தொன்னில் பின்வருமாறு:

| | |
|---|---|
| இல்மனைற்று | 36,719 |
| ரூட்டைல் | 1,808 |
| சர்கோன் | 615 |
| Hi.Ti. இல்மனைற்று | 2,889 |
| காந்தமல்லா கழிவுகள் | 54,172 |
| சுருள் நுண் மண் | 1,953 |
| | 98,156 |

## விற்பனை

கனிப்பொருள் மணல் 113,730 மெ.தொ. விற்பனையால் 1,688 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டது.

| | மெ.தொ. | மி.ரூ. |
|---|---|---|
| இல்மனைற்று | 39,447 | 284 |
| ரூட்டைல் | 945 | 92 |
| சர்கோன் | 664 | 78 |
| Hi.Ti.இல்மனைற்று | 6,722 | 54 |
| சுருள் நுண் மண் | 11,780 | 23 |
| காந்தமல்லா கழிவுகள் | 54,172 | 1,157 |
| | 113,730 | 1,680 |

## விளைவுகளும் பங்கிலாபங்களும்

நிறுவனத்தின் வரி செலுத்திய பின்னரான இலாபம் 457 மில்லியன் ரூபாவாகும். பொறித் தொகுதியின் 277 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க ஈர்க்கப்படாத மேந்தலைச் செலவுகள் இல்லாதிருந்தால் இலாபம் இன்னும் அதிகமாக இருந்து இருக்கும். கட்டுப்படுத்தப்பட்ட உற்பத்தி மற்றும் புல்மோட்டையில் இருந்து நேரடியாகக் கப்பலேற்ற முடியாமை ஆகியவையே ஈர்க்கப்படாத மேந்தலைச் செலவினங்களுக்கு காரணமாகும்.

பங்கிலாபமாக 158.5 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது.

மில்லியன் ரூபா .

| | 2015 | 2014 |
|---|---|---|
| மொத்த வருமானம் | 1,688 | 1,220 |
| மொத்த இலாபம் | 821 | 694 |
| தேறிய இலாபம் | 457 | 329 |

# தகுதிவாய்ந்த அதிகாரியின் அறிக்கை

## ஆதனம், பொறித் தொகுதி, கருவிகள்

குறிப்பு 9இல் உள்ள விபரங்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு ஆதனம், பொறித்தொகுதி உபகரணங்கள் ஆகிய -வற்றின் பதிவழிக்கப்பட்ட பெறுமதி, 1,073 மி. ரூபாவான மூலப் பெறுமதியில் 44% ஆக இருந்தது. நடப்பில் இருக்கும் மூலதன வேலை 303 மில்லியன் ரூபாவாகும். இது பொறித்தொகுதி மற்றும் இயந்திரோபகரணங்கள் பதிலீடு செய்யப்படுதல் மற்றும் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

## குறிக்கப்பட்ட மூலதனம்

80 மில்லியன் பங்குகளைக் கொண்டே வழங்கப்பட்ட மூலதனம் 800 மில்லியன் ரூபாவில் மாறுபடாமல் உள்ளது. எல்லா பங்குகளும் தனியே பொதுத் திறைசேரியின் செயலாளருக்கு சொந்தமானது. விபரங்கள் குறிப்பு இல 21இன் பிரகாரம் காணலாம்.

## ஒதுக்குகள் மற்றும் வைத்திருக்கப்படும் வருவாய்கள்

ஒதுக்குகளில் மாற்றம் இருக்க இல்லை. வைத்திருக்கப்படும் வருவா -ய்கள் 2014ஆம் ஆண்டின் 164 மில்லியன் ரூபாவிலிருந்து 2015ஆம் ஆண்டில் 458 மில்லியன் ரூபா வரை சாதகமாக அதிகரித்துள்ளது.

## குறுங்கால நிதிசார் சொத்துக்கள்

குறுங்கால நிதிசார் சொத்துக்கள் 361 மில்லியன் ரூபாவில் இருந்து 209 மி. ரூபா வரை குறைவடைந்துள்ளன.

## வரி விதிப்பு

ஆண்டிற்கான சாதாரண வரி வீதம் 28% ஆகும். எனினும், தாபனம் தமது ஏற்றுமதிகளுக்காக 12% சலுகை வரி வீதத்தினை அனுபவிக்கின்றது.

## பங்குத் தகவல்கள்

ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய் 5.71 ரூபாவாக இருந்தது.

## நிதி நிலைமைக் கூற்றுத் திகதிக்கு பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்

நிதி நிலைமைக் கூற்றுத் திகதிக்கு பின்னர் சரிப்படுத்தல்கள் செய்ய வேண்டிய எவ்வித நிகழ்வும் ஏற்படவில்லை.

## தொழில் கொள்கைகள்

2015.12.31 ஆந் திகதியில் ஊழியர்களின் எண்ணிக்கை 847 ஆக இருந்தது. மீளாய்வாண்டினுள் முகாமை மனித வள முகாமைத்தவத்திற்கு கூடிய கவனஞ் செலுத்தியது.

பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக ஊழியர் பயிற்சி நிகழ்ச்சிகள் 2015ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்றன.

## நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

தகுதிவாய்ந்த அதிகாரியின் மிகச் சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் அமைய ஊழியர் தொடர்பாகவும் அரசாங்கத்திற்கும் செலுத்த வேண்டிய அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவு -களும் குறிப்பிட்ட திகதியில் உரிய முறையில் செலுத்தியுள்ளதாக திருப்தி கொண்டுள்ளது.

## பணிப்பாளர் சபை

தாபனத்தின் பணிப்பாளர் சபை பின்வருமாறு மாற்றமடைந்துள்ளது:

திரு.டீ.டப்ளியூ. குணசேக்கர - தலைவர்/ முகாமைத்துவப் பணிப்பாளர் (2015.01.26 இராஜினாமா செய்தார்)
திரு. எச்.ஜீ. சிறிசேன -செயற்படு பணிப்பாளர் (2015.01.20 இராஜினாமா செய்தார்)
திரு ஆர். பண்டித்தசேக்கர பணிப்பாளர் (2015.01.28 இராஜினாமா செய்தார்)
திரு. டீ.பீ.ஏ. குஞ்ஞு− பணிப்பாளர் (2015.01.28 இராஜினாமா செய்தார்)
கலாநிதி டீ.எம்.ஓ.டீ.கே. திசாநாயக்கா- பணிப்பாளர் (2015.02.11 இராஜினாமா செய்தார்)

திருமதி ஜே.சீ.வெலிகமகே- பணிப்பாளர் /திறைசேரிப் பிரதிநிதி (2015.01.30 இராஜினாமா செய்தார்)

2015இல் அரசாங்க வளங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சிலிருந்து கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சாக இணை அமைச்சு மாற்றமடைந்ததுடன், பின்வருமாறு புதிய பணிப்பாளர் சபை நியமிக்கவும் இராஜினாமா செய்யவும் பட்டது:-

கலாநிதி ஜீ.பீ.எம்.எம். மொரகொல்ல – தலைவர்/நிர்வாகப் பணிப்பாளர் -2015.01.27 முதல் 2015.08.28 வரை

திரு. எம்.ஐ. பதுர்தீன் - பணிப்பாளர் -2015.02.12 முதல் 2015.09.28 வரை

திருமதி எல்.டீ. சேனானாயக்க– பணிப்பாளர் 2015.03.16 முதல் 2015.09.29 வரை

திரு. எச்.பீ. தயாரத்ன – பணிப்பாளர் 2015.03.25 முதல் 2015.09.28 வரை

திரு. டப்ளியூ.ஏ. உபாலி குணவர்தன – பணிப்பாளர் 2015.03.25 முதல் 2015.09.26 வரை

கலாநிதி எம்.எம். ஹில்மி – செயற்படு பணிப்பாளர் 2015.02.21 முதல் (இராஜினாமா செய்யவில்லை)

2015.09.29 ஆந் திகதியில் இருந்து அமுலாகும் விதத்தில் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை தகுதிவாய்ந்த அதிகாரிக்கு மாற்றப்பட்டது.

## எதிர்காலத் திட்டங்கள்

நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளன. :−

* உள்ளக மின்சார விநியோகிப்புத் தொகுதியினை நவீனமயப்படுத்தலும் தரமுயர்த்துதலும்

* இல்மனைற்று உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் காந்தமல்லா பாரக் கனிப்பொருள் மணலின் தரத்தினை விருத்தி செய்வதற்கும் 3 ஈர உயர் அடர்த்தி காந்தப் பிரிப்பான்களை புதியவற்றினால் பதிலீடு செய்தல்

* புல்மோட்டை, I.R.Z. பொறித்தொகுதிக்கு யான் ஓயா நீரேந்தியிலிருந்து மூல நீர் டிரான்ஸ்மிஷன் லைனிற்கான P.E குழாய்களை அமைத்தல் பணியினை பூர்த்தி செய்தல்

* 12 அலகுகள் பணிக் குழாத்தினருக்கான குவாட்டர்ஸ் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளைப் பூர்த்தி செய்தல்

* பகுதி “A” ஈர ஈர்ப்பு மேம்படுத்தல் பொறித்தொகுதிக்கு கடல் நீர் பம்பும் புதிய அலகினை நிர்மாணித்தல்

* உலர்த்தும் ஆலையின் சர்கோன் சர்கிட்டில் பயன்படுத்தப்பட்ட பழைய உலர்த்தியை fluidized bed dryerஇனால் பதிலீடு செய்தல் மற்றும் அதற்கு 06 உயர் இழுவிசை ரோலர் பிரிப்பான்களை உள்ளடக்குதல்

* உயர் இழுவிசை பிரிப்பான்களை மற்றும் உயர் இழுவிசை தட்டுப் பிரிப்பானகளைப் பதிலீடு செய்வதன் மூலம் ரூடைல் பொறித்தொகுதியினைப் புதுப்பித்தல்

## தகுதிவாய்ந்த அதிகாரியின் அறிக்கை

* பகுதி "A" ஈர ஈர்ப்பு மேம்படுத்தல் பொறித்தொகுதிக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் பழைய பொறித்தொகுதியினை புதிய கட்டடத்துக்கு மாற்றுதல்

* கடல் நீர் பம்பியிலிருந்து பகுதி "A" ஈர ஈர்ப்பு மேம்படுத்தல் பொறித்தொகுதிக்கு கடல்நீர் டிரான்ஸ்மிஷன் லைனிற்கான P.E குழாய்களை அமைத்தல் பணியினைப் பூர்த்தி செய்தல்

* இல்மனைற்று பொறித்தொகுதி ஒன்றை அமைத்தல்

* சர்கோன் உற்பத்திக்கான ஈர ஆலைகளில் 07 பழைய ஈர நடுவண்களுக்குப் பதிலாக புதியனவற்றை ஈடுசெய்தல்

* கோக்கிளாயில் ஈர இழுவிசை மேம்படுத்தல் தொகுதியொன்றை அமைத்தல்

* தென்னைப் பயிர்ச்செய்கை மற்றும் தெற்கு வீடமைப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படும் கரையோரப் பகுதியினைப் பாதுகாப்பதற்கு கேபியன் மதிற் சுவரை அமைத்தல்

* சிவில் இயந்திரவியல் மற்றும் மின்னியல் பட்டறைகள் மற்றும் ஆய்வுகூட கட்டடத்தை தரமுயர்த்துதல்

* உற்பத்தியினை செயற்கை ரூடைல், டைடானியம் ஈரொட்சைட்டு நிறமி, உயர் தர சர்கோன் மா போன்ற பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளுக்கு விஸ்தரித்தல்

* பணிக்குழாத்தினரின் நலன்புரி வசதிகளை அதிகரித்தல் மற்றும் அவர்களது ஆற்றல்களை விருத்தி செய்வதற்கான பயிற்சியினை வழங்குதல்

* பொருத்தமான ICT உட்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல்

* ஒழுங்கான ICT முகாமைத்துவ - த்திற்கு முறையான அணுகு முறையினை அறிமுகப்படுத்துதல்

### தகுதிவாய்ந்த அதிகாரியின் பங்குடைமைகள்

தகுதிவாய்ந்த அதிகாரிக்கு நிறுவனத்தில் எவ்விதப் பங்குடைமையும் இல்லை. 100% பங்குடைமையும் பொதுத் திறைசேரிக்கு உரியதாகும்.

### கூட்டுச் சமூகப் பொறுப்பு

கூட்டுச் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக தாபனம் 0.3 மில்லியன் ரூபாவினை செலவழித்தது. சமூக சேமநல நடவடிக்கைகள், சமய நடவடிக்கைகள், கல்வி நடவடிக்கைகள் என்பனவற்றிற்கு அனுசரணை வழங்கியது.

### ஒப்பந்தங்கள் தொடர்பாக தகுதிவாய்ந்த அதிகாரியின் கடப்பாடு

தாபனத்தினால் செய்துள்ள அல்லது செய்ய உத்தேசித்துள்ள எவ்வித ஒப்பந்தம் தொடர்பாகவும் தகுதிவாய்ந்த அதிகாரியின் நேரடி அல்லது மறைமுகக் கடப்பாடுகள் எதுவும் இல்லை.

### தாபன நிர்வாகம்/உள்ளகக் கட்டுப்பாடு

தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு குறித்து தமக்கு உள்ள பொறுப்பினை தகுதிவாய்ந்த அதிகாரி ஏற்றுக்கொள்கின்றார். தாபனச் சொத்து - க்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நிதிக் கூற்றுக்களை உரிய முறையில் தயாரித்தமையையும் அவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்தும்

விதத்தில் உள்ளக நிர்வாகம் திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், தவறுகள் மற்றும் ஒழுங்கின்மைகளை முற்றாக தடுத்துக் கொள்வதாக அன்றி, அவற்றைக் குறைத்துக் கொள்வதை சாதாரண கால எல்லைக்குள் கண்டறிவ -தையே எந்தவொரு உள்ளக நிர்வாக முறைமையினால் உறுதிப்படுத்த முடியும்.

நிதி அறிக்கைளை ஒப்பமிடும் நாள் வரையிலான கால எல்லைக்குள் உள்ளக நிர்வாக முறைமைகள் செயற்றிறன்மிக்கதாகச் செயற்பட்டதை இட்டு தகுதிவாய்ந்த அதிகாரி திருப்தியடைந்துள்ளார்.

## நிலைப்பாடு குறித்து அக்கறை

நிதி அறிக்கைகளைத் தயாரி - க்கும் போது நிலைப்பாடு குறித்த அக்கறையின் அடிப்படையில் தகுதி வாய்ந்த அதிகாரி செயலாற்றியுள்ளார்.

## கணக்காய்வாளர்கள்

2015 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர்களாக சிசில் அரசகுலரத்ன அன்ட் கம்பனி செயல்பட்டது.

## செயலாளர்கள்

வரையறுக்கப்பட்ட பீ.டப்ளியூ. கோப்பரேட் செக்ரடேரியல் (தனியார்) நிறுவனம் செயலாளர்களாக செயல் - பட்டது.

சபை ஆணைப்படி,<br>
வரையறுக்கப்பட்ட பீ.டப்ளியூ.<br>
கோப்பரேட் செக்ரடேரியல் (தனியார்)<br>
லிமிடட், செயலாளர்கள்

# கடந்த ஐந்து வருடங்களுக்கான முக்கிய நிதிசார் தகவல்கள்

| | | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|
| மொத்த விற்பனை வருவாய் | - மில். ரூபா | 1,567 | 1,985 | 679 | 1,220 | 1,688 |
| மொத்த இலாபம் | - மில். ரூபா | 1,304 | 1,628 | 500 | 694 | 821 |
| ஏனைய வருமானம் | - மில். ரூபா | 200 | 224 | 56 | 56 | 136 |
| வரிக்கு முன்னரான இலாபம் | - மில். ரூபா | 1,107 | 1,373 | 30 | 328 | 503 |
| வரிக்கு பின்னரான இலாபம் | - மில். ரூபா | 950 | 1,190 | 20 | 329 | 457 |
| ஈர்க்கப்படாத மேந்தலைச் செலவினங்கள் | - மில். ரூபா | 248 | 292 | 358 | 259 | 277 |
| மொத்தச் சொத்துக்கள் | - மில். ரூபா | 2,611 | 2,029 | 2,400 | 2,829 | 2,764 |
| மொத்தப் பொறுப்புக்கள | - மில். ரூபா | 319 | 249 | 715 | 847 | 489 |
| பங்குடைமையாளரின் உரிமைப்பங்கு | - மில். ரூபா | 2,292 | 1,780 | 1,684 | 1,981 | 2,276 |
| வருமான வரி | - மில். ரூபா | 155 | 182 | 10 | (2) | 46 |
| திறைசேரிக்கான பங்கிலாபம் மற்றும் திரட்டிய நிதிக்கு மாற்றல் | - மில். ரூபா | 500 | 1,700 | 43 | 14 | 158.5 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | | 611 | 595 | 629 | 636 | 847 |
| உரிமைப்பங்கிற்கான வரியின் முன்னரான தேறிய இலாபம் | | 48% | 77% | 2% | 17% | 22% |
| மொத்த சொத்துக்களுக்கான வரியின் முன்னரான தேறிய இலாபம் | | 42% | 68% | 1% | 12% | 18% |
| நடப்பு வீதம் | | 10:1 | 5:1 | 2:1 | 2:1 | 4:1 |

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியின் அறிக்கை

நல்லாட்சிக்கான பொது முயற்சிகள் வழிகாட்டியின் ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்தவக் கமிட்டி 2015 ஜூன் முதல் அமுலாகுமாறு நியமிக்கப்பட்டது. கமிட்டி பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது:

திருமதி. எல்.டீ. சேனானயக்க - தலைவர்
திரு.எம்.ஐ.பதுர்தீன் - உறுப்பினர்
திரு. டப்ளியூ.ஏ. உபாலி குணவர்த்தன - உறுப்பினர்
திரு. எச்.பீ. தயாரத்ன - உறுப்பினர்

மீளாயவாண்டின் போது கமிட்டி ஒருமுறை கூடியதுடன் இடைக்கால உள்ளகக் கணக்காய்வு அறிக்கை இல 2015-01 தொடர்பில் ஆழமாக விவாதிக்கப்பட்டது. உறுப்பினர்களால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம், எழுப்பப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முகாமைக்கு அறிவுறுத்தல் - கள் வழங்கப்பட்டன.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தினைப் பிரதிநிதிப்படுத்தும் உத்தியோகத்தர்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி கூட்டத்தில் அவதானிபாளர்களாக பங்குபற்றினர்.

பணிப்பாளர் சபையினை நியமிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, மீளாய்வாண்டின் போது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி கூட்டங்களை நடாத்தவதற்கு முடியவில்லை.

திருமதி. எல்.டீ. சேனானயக்க,
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி

# சுயேச்சைக் கணக்காய்வாளரின் அறிக்கை

## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் பங்குதாரர்களுக்கு நிதிக் கூற்றுக்கள் மீதான அறிக்கை

2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று, மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமைப் பங்கில் மாற்றங்கள் கூற்று, முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் 13 முதல் 36 வரையிலான பக்கங்களில் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் மற்றும் ஏனைய விபரக் குறிப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய **இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்**டின் நிதிக் கூற்றுக்களை நாம் கணக்காய்வு செய்துள்ளோம்.

### நிதிக் கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், இந்நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பி -த்தல் ஆகியவற்றுக்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது. இப்பொறுப்பானது, வடிவமை -த்தல், அமுல்படுத்தல் மற்றும் பிழைகள் அல்லது மோசடி காரணமாக தவறான கூற்றுக்கள் அற்றவையாகவும், பொருத்த -மான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிந்துப் பயன்படுத்தியதாகவும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நியாயமான கணக்கியல் மதிப்பீடுசெய்ததாகவும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் ஆகியவை தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுக -ளைப் பேணுதல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

### கணக்காய்வு நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்தின் அடிப்படை

கணக்காய்வளர்கள் என்ற வகையில் எமது கணக்காய்வில் வெளிப்படுத்தி இருக்கும் நிதி அறிக்கைகள் குறித்த கருத்தில் எமது கருத்தினை வெளிப்படுத்துவதே எமது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரமே எமது கணக்காய்வினை மேற்கொள்கின்றோம்.

அதன்படி, தவறான கூற்றுக்களற்றதாக குறிப்பிட்ட நிதி அறிக்கைகள் இருப்பதனை நியாயமான முறையில் உறுதிப்படுத்தும் வகையில் எமது கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற் - கொள்ளப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட நிதி அறிக்கைகளில் சோதனை அடிப்படையில் பரீட்சித்தல், நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளின் விளக்கம் மற்றும் வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகள் என்பன அடங்கியுள்ளன. மேலும் கணக்காய்வா -னது, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு விதிகளை மதிப்பிடுதல், முகாமையால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான மதிப்பீடுகள், முழுமொத்த நிதிக் கூற்று சமர்ப்பித்தலை கணிப்பீடு செய்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

எமது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரை கணக்காய்விற்கு அவசியமான அனைத்து தகவல் -களையும் விளக்கங்களையும் பெற்று உள்ளோம். எனவே எமது அபிப்பிராய -ங்களுக்கான நியாயமான அடிப்படையை எமது கணக்காய்வு வழங்குகின்றது என நாம் நம்புகின்றோம்.

### தகுதிமிக்க அபிப்பிராயத்தின் அடிப்படை

#### *1.* சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

எமக்கு தொழிற்சாலையினைப் பார்வையிடுவதற்கான அனுமதியினை முகாமை வழங்கவில்லையாதலால், தாபனத்தின் சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகள் ஆகியவற்றை பௌதிக ரீதியாக எம்மால் சரிபார்க்க முடியவில்லை. அதனால், சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகள் ஆகிய -வற்றின் நிலைப்பாடு குறித்து அறிந்து கொள்ள முடியவில்லை.

# சுயேச்சைக் கணக்காய்வாளரின் அறிக்கை

## தகுதிமிக்க அபிப்பிராயம்

தகுதிமிக்க அபிப்பிராயத்தின் அடிப்படை பந்திகளில் குறிப்பிட்ட விடயத்தைத் தவிர, 2015 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான திருத்தமான கணக்கீட்டுப் பதிவுகளைத் தாபனம் பேணியுள்ளது என்பதும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளபடி நிதிக் கூற்றுக்கள் தாபனத்தின் அலுவல்களின் நிலைமை

குறித்து உண்மையான, சாதாரணமான கருத்தை வழங்குகின்றன என்பதும் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அமைந்துள்ளன என்பதும் எமது பரிசீலினைகளிலிருந்து புலப்படுகின்றன என்பது எமது அபிப்பிராயமாகும்.

## ஏனைய சட்ட மற்றும் ஒழுங்கு விதிகளின் அவசியம் குறித்து அறிக்கை

2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163(2) இன் தேவைகளின் பிரகாரம் நாம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றோம்:

(அ) கணக்காய்வின் அபிப்பிராயத்தின் அடிப்படை, நோக்கெல்லை, வரையறை -கள் என்பன மேற்படி குறிப்பிட்டவாறு உள்ளன.

(ஆ) எமது அபிப்பிராயத்தின் படி, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நாம் பெற்றுக் கொண்டதுடன், திருத்தமான கணக்கீட்டுப் பதிவுகளைத் தாபனம் பேணியுள்ளது என்பது எமது பரிசீலனைகளிலிருந்து புலனாகியது,

தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 151 (2) இன் தேவைகளுடன் இணங்குகின்றன.

**சிசில் அரசகுலரத்ன அன்ட் கம்பனி**
**பட்டயக் கணக்காளர்கள்**
**கொழும்பு**
**2016 மே 18**

# விபரமான வருமானக் கூற்று

**திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது**

| | குறிப்பு | 2015 Rs. | 2014 Rs. |
|---|---|---|---|
| **மொத்த வருவாய்** | 3 | 1,688,079,113 | 1,219,804,738 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | | (184,815) | (23,861) |
| **தேறிய வருவாய்** | | 1,687,894,298 | 1,219,780,877 |
| விற்பனைச் செலவு | 4 | (866,415,748) | (525,602,242) |
| **மொத்த இலாபம்** | | 821,478,550 | 694,178,635 |
| ஏனைய தொழிற்படு வருமானம் | 5 | 65,927,211 | 20,576,111 |
| | | 887,405,761 | 714,754,746 |
| விநியோக செலவுகள் | | (14,163,023) | (7,105,969) |
| நிர்வாகச் செலவுகள் | | (163,079,380) | (156,780,929) |
| ஏனைய தொழிற்படு செலவினங்கள் | | (277,045,734) | (258,805,844) |
| | | (454,288,137) | (422,692,742) |
| தொழிற்படு இலாபம் | | 433,117,624 | 292,062,004 |
| நிதி வருமானம் | 6 | 69,636,884 | 35,547,169 |
| **ஆண்டிற்கான வருமான வரிக்கு முன்னரான இலாபம்** | | 502,754,508 | 327,609,174 |
| வருமான வரிச் செலவுகள் | 7 | (45,984,819) | 1,882,404 |
| **ஆண்டிற்கான வருமான வரிக்கு பின்னரான இலாபம்** | | 456,769,689 | 329,491,578 |
| **ஆண்டிற்கான தேறிய இலாபம்** | | 456,769,689 | 329,491,578 |
| **பங்கொன்றிற்கான வருவாய்** | 8 | 5.71 | 4.12 |
| **ஆண்டிற்கான தேறிய இலாபம்** | | 456,769,689 | 329,491,578 |
| **ஏனைய விபரமான வருமானங்கள்** | | (3,873,677) | (18,668,816) |
| **ஆண்டிற்கான மொத்த விபரமான வருமானங்கள** | | 452,896,012 | 310,822,762 |

# நிதி நிலைமைக் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு | குறிப்பு | 2015 Rs. | 2014 Rs. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| சொத்து, பொறித்தொகுதி, கருவிகள் | 9 | 779,562,362 | 514,148,994 |
| அருவச் சொத்துக்கள் | 10 | 22,476,452 | 22,779,862 |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு | 11 | 258,250 | 578,613 |
| முற்பணம் | 13 | 554,921,448 | 552,421,448 |
| மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள் | | 1,357,218,512 | 1,089,928,917 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பொருட்பதிவேடுகள | 15 | 800,158,127 | 960,758,388 |
| குறுங்கால நிதிச் சொத்துக்கள் | 16 | 208,640,110 | 360,569,133 |
| முற்பணங்கள் மற்றும் வைப்புக்கள் | 17 | 14,414,611 | 95,354,664 |
| முன்செலுத்தப்பட்ட செலவினங்கள் | 18 | 35,444,787 | 33,621,382 |
| வருமான வரி கிடைப்பனவுகள் | 24 | --------- | 16,655,430 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 19 | 330,084,215 | 239,933,767 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 20 | 18,457,054 | 31,769,189 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 1,407,198,904 | 1,738,661,953 |
| மொத்த சொத்துக்கள் | | 2,764,417,416 | 2,828,590,870 |
| **உரிமைப்பங்கு மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **உரிமைப்பங்கு** | | | |
| குறிக்கப்பட்ட மூலதனம் | 21 | 800,000,000 | 800,000,000 |
| ஏனைய ஒதுக்குகள் | 22 | 1,017,544,343 | 1,017,544,343 |
| வைத்திருக்கப்படுகின்ற வருவாய்/(நட்டம்) | 23 | 458,024,737 | 163,628,724 |
| **மொத்த உரிமைப் பங்கு** | | 2,275,569,080 | 1,981,173,067 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| இளைப்பாற்று நன்மை கடப்பாடுகள் | 14 | 63,551,328 | 62,582,374 |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு | 12 | 32,100,956 | 14,616,137 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 24 | 6,096,184 | ---------- |
| | | 101,748,468 | 77,198,511 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| வியாபாரம் மற்றும் ஏனைய கடன் வழங்குவோர் | 25 | 306,930,104 | 662,307,372 |
| ஏற்பாடுகள் மற்றும் சேரும் செலவினங்கள் | 26 | 80,169,764 | 35,114,109 |
| குறுங்காலக் கடன் | 27 | ---------- | 72,797,811 |
| | | 387,099,868 | 770,219,292 |
| மொத்த பொறுப்புக்கள் | | 488,848,336 | 847,417,803 |
| மொத்த பொறுப்புக்கள் | | 2,764,417,416 | 2,828,590,870 |

2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதனை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

ஒப்பம் -திருமதி டப்ளியு.கே. தமாரா -**தலைமை நிதி உத்தியோகத்தர்**

இந்நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பித்தலுக்கும் தகுதிவாய்ந்த அதிகாரி பொறுப்பாக உள்ளார். அதற்கு சார்பாகவும் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டுள்ளது.

ஒப்பம்- திரு. ரீ. அசோக பீரிஸ் - **தகுதிவாய்ந்த அதிகாரி**

## உரிமைப்பங்கு மாற்றங்கள் மீதான கூற்று

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

ரூபா

| | அறிவிக்கப்பட்ட மூலதனம் | வைத்திருக்கப்படுகின்ற வருவாய் | மிதவைப்படக காப்புறுதி ஆழ் நிதிய ஒதுக்கு | பதிலீடு /தரமுயர்த்தல் பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் ஆழ் நிதிய ஒதுக்கு | தலைமை அலுவலகக் கட்டட ஆழ் நிதிய ஒதுக்கு | சுனாமி பழுதுபார்த்தல் ஆழ் நிதிய ஒதுக்கு | ஊழியர் ஒதுக்கு நஷ்டஈட்டு ஆழ் நிதிய | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2014.01.01 **ஆந் திகதியன்று நிலுவை** | 800,000,000 | (133,194,037) | 111,000,000 | 706,346,960 | 171,149,672 | 18,801,474 | 10,246,237 | 1,684,350,306 |
| வருடத்திற்கான இலாபம் | --------- | 329,491,578 | --------- | --------- | --------- | --------- | --------- | 329,491,578 |
| வருடத்திற்கான ஏனைய விபரமான வருமானம் | --------- | (18,668,816) | --------- | --------- | --------- | --------- | --------- | (18,668,816) |
| வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம் | --------- | 310,822,762 | --------- | --------- | --------- | --------- | --------- | 310,822,762 |
| திறைசேரிக்கான பங்கிலாபம் | --------- | (14,000,000) | --------- | --------- | --------- | --------- | --------- | (14,000,000) |
| 2014.12.31 **ஆந் திகதியன்று நிலுவை** | 800,000,000 | 163,628,725 | 111,000,000 | 706,346,960 | 171,149,672 | 18,801,474 | 10,246,237 | 1,981,173,068 |
| முன்னைய வருடத்திற்கான சரிப்படுத்துகைகள் | | | | | | | | |
| | 800,000,000 | 163,628,725 | 111,000,000 | 706,346,960 | 171,149,672 | 18,801,474 | 10,246,237 | 1,981,173,068 |
| வருடத்திற்கான இலாபம் | | 456,769,689 | | | | | | 456,769,689 |
| வருடத்திற்கான ஏனைய விபரமான வருமானம் | --------- | (3,873,677) | --------- | --------- | --------- | --------- | --------- | (3,873,677) |
| வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம் | --------- | 452,896,012 | --------- | --------- | --------- | --------- | --------- | 452,896,012 |
| திறைசேரிக்கான பங்கிலாபம் | --------- | (158,500,000) | --------- | --------- | --------- | --------- | --------- | (158,500,000) |
| 2015.12.31 **ஆந் திகதியன்று நிலுவை** | 800,000,000 | 458,024,737 | 111,000,000 | 706,346,960 | 171,149,672 | 18,801,474 | 10,246,237 | 2,275,569,080 |

# காசுப்பாய்ச்சல் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|
| **வரிவிதிப்புக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)** | | |
| **சீராக்கல்கள்** | 502,754,508 | 327,609,174 |
| பெறுமானத்தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | 76,021,455 | 62,209,097 |
| வட்டி வருமானம் | (69,636,884) | 35,547,169 |
| பணிக்கொடை | 10,517,230 | 8,985,947 |
| திட்டமிடப்பட்ட சொத்துக்கள் மீதான நியாயமான பெறுமதி | (234,357) | (231,144) |
| ஓய்வூதிய நலன் பொறுப்புக்கள் மீதான காப்புறுதி இழப்பு | ---------- | ---------- |
| சொத்து, பொறித்தொகுதி, கருவிகள் விற்பனை மீதான இலாபம் | (1,977,103) | ---------- |
| **செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | 517,444,849 | 434,120,243 |
| பொருட்பதிவுகளில் (அதிகரிப்பு)/ குறைவு | 160,600,261 | (28,584,079) |
| வியாபாரம் மற்றும் ஏனைய வருமதிகளில் (அதிகரிப்பு)/ குறைவு | (13,533,799) | (138,519,368) |
| வியாபாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு)/ குறைவு | (454,821,612) | 69,650,053 |
| கடன் வசதிகளில் (அதிகரிப்பு)/ குறைவு | (72,797,811) | 72,797,810 |
| **செயற்பாடுகளில் இருந்து தோற்றுவிக்கப்பட்ட பணம்** | 136,891,888 | 409,464,659 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (13,187,595) | (6,798,875) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (5,748,387) | (3,626,841) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு** | 117,955,906 | 399,038,943 |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| | | |
| முதலீடுகளில் உள்ள வைப்புக்கள் | 151,929,023 | (199,399,257) |
| வட்டி வருமானம் | 69,636,884 | (35,547,169) |
| முடிவுறாத மூலதன வேலை | (192,226,654) | (80,545,398) |
| சொத்து, பொறித் தொகுதி, கருவிகள் அருவச் சொத்துக்கள் மற்றும் காணிகளைக் கைப்பற்றுதல் | (148,648,727) | (9,719,440) |
| சொத்து, பொறித்தொகுதி, கருவிகளை அகற்றுவது மூலம் பெற்ற தொகை | 2,041,434 | 10,338 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | (117,268,040) | (325,200,926) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| செலுத்திய பங்கிலாபம் | (14,000,000) | (43,000,000) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | (14,000,000) | (43,000,000) |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவை மீதான தேறிய அதிகரிப்பு/(குறைப்பு)** | (13,312,134) | 30,838,017 |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | 31,769,188 | 931,171 |
| **வருட இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை** | 18,457,054 | 31,769,188 |
| | | |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவையின் பகுப்பாய்வு** | | |
| | | |
| வங்கியிலிருக்கும் பணம் | 18,275,903 | 31,581,308 |
| கையிருப்பில் உள்ள பணம் | 161,151 | 167,880 |
| சில்லறைப் பணம் | 20,000 | 20,000 |
| | 18,457,054 | 31,769,188 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**2015 திசெம்பர் 31ஆந் திகதியுடன் ஆண்டிற்கானது**

## 1. தாபனத் தகவல்கள்

### 1.1 பொது

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட் இலங்கை அரசாங்கத்திற்கு முழுமையாக சொந்தமான இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 341/21, சரண மாவத்தை, இராஜகிரியவில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

பாரமான கனிப்பொருள் மணலை அகழ்தல், பதப்படுத்தல், சந்தைப்படுத்தல் ஆகியனவே அதன் பிரதான செயற்பாடுகளாகும்.

திருகோணமலை கொட்பேயில் உள்ள மிதவைகள் பிரிவு முடப்பட்டுள்ளது.

### 1.3 ஊழியர் எண்ணிக்கை

வருட இறுதியில் தாபனத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை 847 ஆகும். (2014இல் 632ஆக இருந்தது.)

## 2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1 தயாரித்தலின் அடிப்படை

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் - SLFRSs) இணங்க தயார் செய்யப்பட்டுள்ளன. இந்நிதிக் கூற்றுக்கள் சரித்திரச் செலவு மரபின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRSs) அனுகூலமாகத் தயாரிக்கும் போது நம்பகமான கணக்கீட்டு மதிப்பீடுகளைப் பயன்படுத்துதல் அவசியமாகும். அத்துடன், முகாமை கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் படிமுறைகளின் போது, முகாமையின் தீர்ப்புக்களும் அடிப்படையாகக் கொள்ளப்படும். இவ்வாறு பிரயோகிக்கப்படும் மேற்படி உயர் முகாமைத்துவ தீர்ப்புகள் தொடர்பான பரப்புக்கள், இந்நிதி அறிக்கைகளுக்குரிய முக்கிய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் என்பன குறிப்பு இல 2A யில் காட்டப்பட்டுள்ளன.

### 2.2 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

கடந்த வருடத்தின் நிதிக் கூற்றுக்களுக்கான சமர்ப்பித்தல் மற்றும் வகைப்படுத்தல் என்பன சிறந்த சமர்ப்பித்தலுக்காவும் நடப்பு ஆண்டில் ஏனையவற்றுக்கு சமமாக இருக்கக் கூடிய விதத்திலும் திருத்தப்பட்டுள்ளன.

### 2.3 வெளிநாட்டு நாணய மற்றம்

#### 2.3.1 முன்வைத்தல் மற்றும் தொழிற்படு நாணயப் புழக்கம்

இந்நிதிக் கூற்றுக்களில் உள்ள கொடுக்கல் வாங்கல் மற்றும் நிலுவைகள் என்பன நிறுவனம் செயற்படும் ஆரம்ப பொருளாதாரச் சூழலுக்குரிய நாணயத்தினைப் பயன்படுத்தி அளவிடப்பட்டுள்ளன. நிறுவனத்தின் சமர்ப்பிப்பதற்கான புழக்கத்தில் இருக்கும் நாணயமான இலங்கை ரூபாயைப் (LKR) பயன்படுத்தி நிதி அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

### 2.3.2 கொடுக்கல் வாங்கல் மற்றும் நிலுவைகள்

கொடுக்கல் வாங்கல் நடைபெறும் தினத்தில் நிலவிய செலாவணி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு நாணயத்தினால் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல் தொழிற்படு நாணயத்திற்கு மாற்றப்பட்டது. அவ்வாறான சரிப்பத்தல்களின் விளைவாகவும் நாணயச் வெளிநாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிலின் வருட இறுதி மாற்றல் வீதங்களின் மாற்றங்களாலும் ஏற்படக்கூடிய அந்நிய செலாவணி இலாபங்களும் நட்டங்களும் விபரமான வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

### 2.4 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் என்பன நிறுவனத்தின் முகாமையால் எதிர்பார்க்கப்படும் விதத்தில் பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு கொண்டுவருவதற்கு மேற்கொள்கொள்ளும் செலவுகள் உள்ளடங்களாக ஆரம்பத்தில் செலவினத்தில் பதியப்பட்டன.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் மீதான செலவுகளிலிருந்து திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்கள் ஆகியவற்றை கழித்து வரும் பெறுமதியில் கணிப்பிடப்பட்டன.

அச்செலவினால் சொத்தின் எதர்பார்க்கப்பட்ட ஆயுகாலத்தை நீடீக்க முடிந்தால் அதனால் உருவாகும் இலாபங்கள் தாபனத்திற்கு கிடைத்தாலேயே பிந்திய கால செலவுகள் சொத்துக்களின் காவுகைத் தொகையில் உள்ளடக்கவோ அல்லது சொத்தாகவோ இனங்காணப்படுவதுடன், தாபனத்தால் அச்செலவினை நம்பகமான முறையில் அறவிட முடிகின்றது. ஏனைய எல்லா சொத்துக்களையும் நாளாந்தம் பராமரிப்பதற்கும் பேணுவதற்கும் மேற்கொள்ளும் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் உரிய காலப்பகுதிக்கான செலவாகக் கருதப்படும்.

காணிகள் பெறுமதி இறக்கஞ் செய்யப்படுவதில்லை. ஏனைய சொத்துக்களின் தேய்மானம் நேர்கோட்டு முறைமையைப் பயன்படுத்தி கீழே காட்டப்பட்டவாறு மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்குள் செலவு ஒதுக்கப்பட்டு அளவிடப்படும்:

| | | |
|---|---|---|
| வேலைத்தள அபிவிருத்தி | 20 வருடங்கள் | 5% |
| கட்டடங்கள் | 20 வருடங்கள் | 5% |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் | 10 வருடங்கள் | 10% |
| கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 10 வருடங்கள் | 10% |
| தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | 10 வருடங்கள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 5 -6.5 வருடங்கள் | 15%-20% |
| நீர் வழங்கல் | 10 வருடங்கள் | 10% |
| மிதவைப் படகுகள் | 10 வருடங்கள் | 10% |
| சகதிச் சுரங்கங்கள் | 4 வருடங்கள் | 25% |
| கணினி வன்பொருள் | 4 வருடங்கள் | 25% |

சொத்தின் காவுகைத் தொகை அதன் மதிப்பிடப்பட்ட மீளப்பெறக்கூடிய தொகையை விடக் கூடுதலாக இருப்பின், அச்சொத்தின் காவுகைத் தொகை உடனடியாக மீளக் கிடைக்கக்கூடிய தொகையில் பதிவுசெய்யப்படும்.

தாபனம் அரச மதிப்பீட்டாளர் ஒருவரைக் கொண்டு மதிப்பீடு செய்வதற்கான முயற்சிகளை பயன் தரவில்லை என்பதால் சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகள் மீள்மதிப்பீடு தற்போதைக்கு மேற்கொள்ளப்படவில்லை.

### 2.5 அருவச் சொத்துக்கள்

விசேட கணினி மென்பொருள் மற்றும் முறைமைகளைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளும் செலவு கைப்பற்றப்பட்ட கணினி மென்பொருள் மற்றும் தொழிற்படும் தொகுதியாக மூலதனமாக்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட அருவச் சொத்துக்கள் செலவிலிருந்து திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து செலவில் கணிக்கப்பட்டுள்ளன. இச்செலவுகள் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்குள் பின்வருமாறு கடன் கழிப்பு செய்யப்படும்:-

| | | |
|---|---|---|
| கணினி மென்பொருள் | 4 வருடங்கள் | 25% |

கணினி மென்பொருள் பேணல் தொடர்பான செலவினங்கள் குறிப்பிட்ட செலவு மேற்கொள்ளப்பட்ட காலத்தின் செலவாகக் கருதப்படும்.

### *2.6* நிதி சாரா சொத்துக்கள் மீதான பெறுமதி இழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் தாபனத்தால் அதன் சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும்கருவிகள் மற்றும் அருவச் சொத்துக்கள் மீதான காவுகைப் பெறுமானங்கள் குறித்து மீளாய்வு செய்ய வேண்டியுள்ளதுடன், அச்சொத்துக்கள் தொடர்பாக ஏதேனும் பெறுமதி இழப்புக்கான அறிகுறிகள் இருக்கின்றனவா என உறுதிக்கடுத்திக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு ஏதேனும் அறிகுறிகள் இருப்பின், பெறுமதி இழப்பு நட்ட(இருப்பின்) அளவினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய சொத்தின் மீளக் கிடைக்கக் கூடிய பெறுமதி மதிப்பீடு செய்யப்படும். ஒவ்வொரு சொத்தினதும் மீள அறவிடக்கூடிய பெறுமதியினை மதிப்பீடு செய்யவதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் பண உருவாக்கற் கூறாகக் கருதி, சொத்துக்கள் உரியதாகும் காசு உருவாக்கற் கூறின் மீள அறவிடக்கூடிய பெறுமதியினை மதிப்பீடு செய்ய தாபனம் முடிவு செய்யும்.

விற்பனை மீதான செலவினங்களைக் கழித்த நியாயமான பெறுமதியையும் நடப்பிலுள்ள பெறுமதியையும் விடக் கூடுதலான பெறுமதியே மீள் அறவிடக்கூடிய பெறுமதி ஆகும். நடப்பிலுள்ள பெறுமதியை மதிப்பீடு செய்கையில், வரிக்கு மன்பான கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால பணப்பாய்ச்சல்கள் அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிக்கப்படும். அக்கழிவு வீதம் பணத்தின் மீதான காலப் பெறுமதியின் நடப்பிலுள்ள சந்தை மதிப்பீடுகளையும் எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் சரிப்படுத்தப்படாத மதிப்பீடுகளுக்கான சொத்துக்களில் குறிப்பிட்ட இழப்பு நேரிடக்கூடிய நிலையையும் பிரதிபலிக்கின்றன.

ஒரு சொத்தின் மீள அறவிடக்கூடிய தொகை (அல்லது பண உருவாக்கற் கூறு) அதன் காவுகைத் தொகையைவிடக் குறைவாக மதிப்பபீடு செய்யப்படும், சொத்தின் காவுகைத் தொகை (அல்லது பண உருவாக்கற் கூறு) அதன் மீள அறவீட்டுத் தொகைக்கு குறைக்கப்படும். பெறுமதி இழப்பு நட்டமானது விபரமான வருமானக் கூற்றில் உடனடியாக சரிப்படுத்தப்படும்.

### *2.7* நிதிச் சொத்துக்கள்

#### 2.7.1 வகைப்படுத்துதல்

ஆரம்ப இனங்காணலாக தாபனம் அதன் நிதிச் சொத்துக்களை கடன்களாகவும் வருமதிகளாகவும் வகைப்படுத்தலை பின்வருமாறு உறுதிப்படுத்துகின்றது:

### கடன்கள் மற்றும் வருமதிகள்

கடன்கள் மற்றும் வருமதிகள் என்பன நிரந்தரமாகவும் உறுதியாகவும் செயற்படு சந்தையில் பட்டியலிடப்படாத மரபு சாரா நிதிச் சொத்துக்களாகும். நடைமுறையற்ற சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்ட, அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதிக்கு பின்னரான 12 மாதங்களை விடக் கூடிய முதிர்ச்சிகளைத் தவிர, கடன்களும் வருமதிகளும் நடைமுறைச் சொத்துக்களுக்குள் உள்ளடக்கப்படுகின்றன. அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியின் போது தாபனத்தின் மற்றும் வருமதிகளில் வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள், மீள்கொள்வனவு செய்யக்கூடிய அரசாங்க ஆவணங்கள்,அரச நிறுவனங்களில் முதலீடுகள், தற்காலிக மிகை நிதியம், முற்கொடுப்பனவுகள், ஊழியர்க்கு வழங்கிய கடன், காசும் காசுக்கு சமமானவையும் என்பன உள்ளடங்குகின்றன.

### 2.7.2 இனங்காணல் மற்றும் ஆரம்ப மதிப்பீடு

கடன்கள் மற்றும் வருமதிகளாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்கள், தாபனம் கொடுக்கல் வாங்கலில் முதலில் ஈடுபட்ட நாளிலேயே வகைப்படுத்தப்படும். நிதிச்சொத்தொன்று ஆரம்பத்தில் நியாயமான பெறுமானத்தையும் நேரடி கொடுக்கல் வாங்கல் செலவுகளையும் கூட்டுவதன் மூலம் மதிப்பிடப்படும்.

நிதிச் சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல் பெறுவதற்கான உரிமை காலாவதியாகும் போது அல்லது வேறு தரப்பினருக்கு மாற்றும் போது மற்றும் தாபனம் நிதிச் சொத்துக்களின் எல்லா ஐயப்பாடானதும் விளைவுமிக்கதுமான உரிமைகளை மாற்றிய போதும் நிதிச்சொத்துக்களை இனங்காண்பது நிறுத்தப்படல் வேண்டும்.

### 2.7.3 பிற்கால மதிப்பீடு

கடன்களும் வருமதிகளும் விளைபயன்மிக்க வட்டி முறைமையைப் பயன்படுத்தி பெறுமதி இழப்பினைக் கழித்து கடன் கரைப்புச் செலவில் அளவிடப்படும்.

### 2.7.4 நிதிச் சொத்துக்களளின் பெறுமதி இழப்பு கடன் கரைப்புச் செலவு மீதான சொத்துக்கள்

தாபனம் எல்லா அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் நிதிச் சொத்தொன்றில் பெறுமதி இழப்பு ஏற்படுவதற்கு நிச்சயமான ஆதாரம் உள்ளதா என மதிப்பீடு செய்யும். சொத்தின் ஆரம்ப வகைப்படுத்தலின் பின்னர் (நட்ட நிகழ்வு) நடைபெறும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின் காரணமாக தெளிவான ஆதாரம் இருந்தாலேயே, நிதிச் சொத்தொன்றில் பெறுமதி இழப்பு ஏற்படும் அல்லது பெறுமதி இழப்புக்கு ஆளாகும். மேலும் அந்நட்ட நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) நம்பகமான முறையில் மதிப்பிடப்படக் கூடிய நிதிச் சொத்துக்கள் மீதான மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் பாதிப்பை ஏற்படுத்தும்.

கடன் கரைப்புச் செலவில் மேற்கொள்ளப்படும் கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான இழப்புத் தொகை, நிதிச் சொத்துக்களின் மூல விளைபயன் மிக்க வரி வீத்தில் கழிக்கப்பட்டு (இன்னும் நடைபெற்றிராத எதிர்கால கடன் நட்டங்கள் தவிர்ந்த) சொத்துக்களின் காவுகைத் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால் காசுப் பாய்ச்சல்களின் நடப்பிலுள்ள பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்படும். நிதிச் சொத்துக்களின் காவுகைத் தொகையானது கழிக்கப்படுவதுடன், நட்டத் தொகையானது விபரமான வருமானக் கூற்றில் வகைப்படுத்தப்படும்.

பிற்காலப்பகுதியில் பெறுமதி இழப்பு நட்டங்கள் குறைந்தாலோ மற்றும் பெறுமதி இழப்பு இனங்காணப்பட்டதன் பின்னர் ஏற்படும் நிகழ்வுடன் தொடர்புபடுத்த முடிந்தாலோ முன்பு இனங்காணப்பட்ட பெறுமதி இழப்புவட்டத்தின் பின்னடைவு விபரமான வருமானக் கூற்றில் வகைப்படுத்தப்படும்.

### *2.8* இருப்புக்கள் பதிவு

இருப்புக்கள் பதிவு குறைந்த செலவில் அல்லது தேறிய பணமாகும் பெறுமதியில் குறிக்கப்படும். செலவு நிறையளிக்கப்பட்ட சராசரி செலவு (WAC) அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

### *2.9* வர்த்தக வருமதிகள்

வர்த்தக வருமதிகளாவன சாதாரண வர்த்தக நடவடிக்கைகளில் விற்கப்பட்ட பொருட்களுக்கான வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையாகும். வர்த்தக நடவடிக்கைகளின் சாதாரண தொழிற்படு வட்டத்தில் சேகரித்தல் எதிர்பார்க்கப்படுவதுடன், அவை நடைமுறைச் சொத்தக்களாக வகைப்படுத்தப்படும்.

வர்த்தக வருமதிகள் ஆரம்பத்தில் விலைப்பட்டியல் பெறுமானமான நியாயமான பெறுமதியில் இனங்காணப்பட்டன. பிற்பகுதியில் பணத்தின் நேரடிப் பெறுமதி முக்கியமற்றதாக உள்ள குறுகிய காலப்பகுதில் கிடைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி இழப்பிற்கான ஏற்பாடுகளை கழித்து முதல் விலைப்பட்டியல் பெறுமதியில் அளவிடப்பட்டது.

தாபனம் அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் வர்த்தக வருமதிகளில் பெறுமதி இழப்பு ஏற்படுவதற்கு நிச்சயமான ஆதாரம் உள்ளதா என மதிப்பீடு செய்யும். வர்த்தக வருமதிகளுக்கான பெறுமதி இழப்பின் தெளிவான ஆதாரத்தில் கொடுப்பனவுகள் சேகரித்தல் மீதான தாபனத்தின் கடந்த கால அனுபவங்கள், தாமதித்த கொடுப்பனவுகள் எண்ணிக்கையில் அதிகரிப்பு என்பன அடங்குகின்றன. வர்த்தகக் கிடைப்பனவுகளில் பெறுமதி இழப்பு ஏற்படும் மற்றும் பெறுமதி இழப்புக்கான தெளிவான ஆதாரம் இருந்தாலேயே பெறுமதி இழப்பிற்கு ஆளாகும்.

### 2.10 காசும் காசுக்கு சமமானவையும்

காசுப் பாய்ச்சல்கள் மீதான கூற்றில் காசும் காசுக்கு சமமானவைகளில் கையிலுள்ள பணம், வங்கியிலுள்ள கோரிக்கை வைப்புக்கள், மூன்று அல்லது அதற்கு குறைவான மாத ஆரம்ப முதிர்ச்சிகளைக் கொண்ட ஏனைய குறுங் கால திரவத்தன்மைமிக்க முதலீடுகள் என்பன அடங்கும்.

### 2.11 குறிக்கப்பட்ட மூலதனம்

குறிக்கப்பட்ட மூலதனம் வெளியிடப்பட்ட பங்குகள் மீதான பெறுமதியைக் குறிக்கும். பங்குகள் உரிமைப் பங்காக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.12 நிதிசார் பொறுப்புக்கள்

தாபனம் நிதி சார் பொறுப்புக்களை ஏனைய நிதிசார் பொறுப்புக்களில் வகைப்படுத்துகின்றது. தாபனத்தின் ஏனைய நிதிசார் பொறுப்புக்களில் வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அடங்குகின்றன. ஆரம்பத்தில் ஏனைய நிதிசார் பொறுப்புக்கள் நியாயமான பெறுமதியுடன் நேரடி நேரடி கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் கூட்டுவதன் மூலம் இனங்காணப்பட்டன. ஆரம்ப இனங்காணலின் பிற்பட்ட காலத்தில் இந்நிதிசார் பொறுப்புக்கள் பணத்தின் நேரடிப் பெறுமதி முக்கியமற்றதாக உள்ள குறுகிய காலப்பகுதில் கிடைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி முதல் விலைப்பட்டியல் பெறுமதியில் அளவிடப்பட்டது.

தாபனம் நிதிசார பொறுப்பொன்றை அதன் ஒப்பந்தரீதியான கடப்பாடுகள் தீர்க்கப்படும் போது, இரத்துச் செய்யப்படும் போது அல்லது காலாவதியாகும் போது இனங்காண்பதை நிறுத்தும்.

## 2.13 வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்

வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் என்பது வழங்குனர்களிடமிருந்து சாதாரண வர்த்தக நடக்கைகளின் போது பெறப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கு செலுத்த வேண்டிய கடப்பாடுகளாகும். வர்த்தக மற்றும்' ஏனைய கொடுப்பனவுகள் சாதாரண தொழிற்படு வர்த்தக வட்டத்தில் இருப்பதால் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் விலையான நியாயமான விலையில் இனங்காணப்பட்டது. பிற்பட்ட காலத்தில் இந்நிதிசார் பொறுப்புக்கள் பணத்தின் நேரடிப் பெறுமதி முக்கியமற்றதாக உள்ள குறுகிய காலப்பகுதில் கிடைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி முதல் விலைப்பட்டியல் பெறுமதியில் அளவிடப்பட்டது.

## 2.14 நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி

இது நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரியைக் கொண்ட காலப்பகுதிக்கான வரிச் செலவு ஆகும். விபரமான வருமானக் கூற்றில் வரி வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய விபரமான வருமானங்களுக்குரிய உருப்படிகளுக்கு தொடர்பான அளவுக்கு மாற்றமாக, வரியானது விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. இவ்வகையில், வரி ஏனைய விபரமான வருமானத்திலும் இனங்காணப்பட்டுள்ளது.

நடைமுறை வருமான வரிக் கட்டணம் அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் தாபனத்திற்கும் வரி விதிக்கக்கூடிய வருமான உருவாக்கத்திற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள வரிச் சட்டங்களின் அடிப்படையில் கணிக்கப்படும். வரி அதிகார சபைகளுக்கு செலுத்த வேண்டிய எதிர்பார்க்கப்பட்ட தொகைகளின் அடிப்படையில்சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு தாபனம் ஏற்பாடுகளை ஒதுக்கியுள்ளது.

பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்பக்கள் மீதான வரி அடிப்படைகளுக்கும் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும் அவற்றின் தொகைகளுக்கும் இடையில் எழும் தற்காலிக வித்தயாசங்கள் மீது இனங்காணப்படும். அக் கொடுக்கல் வாங்கலினால் கணக்கீடோ அல்லது வரிவிதிக்கக்கூடிய இலாபமோ அல்லது நட்டமோ பாதிப்படையாத சந்தர்ப்பத்தில் இருக்க கூடிய வர்த்தக ஒருங்கிணைப்புதவிர கொடுக்கல் வாங்கலில் கொத்தின் அல்லது பொறுப்பின் ஆரம்ப இனங்காணலிலிருந்து எழுந்தால் பிற்போடப்பட்ட வரி கணக்கிடப்படமாட்டாது. அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதி நாளில் சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி தீர்மானிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட பிற்போடப்பட்ட வரி நிறைவேற்றப்படும் போது அல்லது பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு தீர்க்கப்படும் போது பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் தற்காலிக வேறுபாடுகள் பயன்படுத்தக்கூடிய எதிர்காலத்தில் வரியில்லா இலாபம் கிடைக்கும் எனக் கருதக்கூடியதாயின் மாத்திரமே இனங்காணப்படும்.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடைமுறை வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக நடைமுறை வரிச் சொத்துக்களை குறைநிரப்புவதற்கு சட்டரீதியாக செயற்படுத்தக்கூடிய உரிமை இருக்கும் போதும் அதே வரிவிதிப்பு அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வருமான வரிகள் தொடர்பான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான பிற்போடப்பட்ட வரிகள் உள்ள போதும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறைநிரப்பப்படுகின்றன.

## 2.15 ஊழியர் நலன்கள்

தாபனம் நிலையான நன்மைகள் மற்றும் நிலையான பங்களிப்பு திட்டங்களைக் கொண்டுள்ளது.

## 2.15.1 நிலையான பங்களிப்புத் திட்டம்

நிலையான பங்களிப்புத் திட்டமானது தொழிலுக்குப் பினிரான நன்மைகள் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட நிறுவனமொன்றுக்கு நிலையான பங்களிப்புக்களைத் தாபனம் செலுத்தும் திட்டமாகும். தாபனம் மேலதிகப் பங்களிப்புக்களைச் செலுத்துவதற்கு எவ்வித சட்ட ரீதியான அல்லது ஆக்கபூர்வமான பொறுப்பினையோ கொண்டிருப்பதில்லை. பங்களிப்புக்கள் செலுத்த வேண்டும் போது ஊழியர் நலன் செலவாக இனங்காணப்படும்.

தாபனம் ஊரியரின் மொத்த ஊதியத்திலிருந்து 12%இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF) மொத்த ஊதியத்தின் 3%இனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியதிற்கும் (ETF) பங்கிளிக்கின்றது.

## 2.15.2 நிலையான நலன்கள் திட்டம்

நிலையான நலன்கள் திட்டம் தொடர்பில் தாபனத்தின் கடப்பாடானது, அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ள நிலையான நன்மைகள் கடப்பாட்டின் நடப்புப் பெறுமதியாகும். நிலையான நன்மைகள் கடப்பாடு வருடாந்தம் நெறிப்படுத்தப்பட்ட அலகுப் பற்று முறைமையைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

நிலையான நலன்கள் திட்டத்தின் செலவு காப்பீட்டு கணிப்பீடுகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படும். காப்பீட்டுக் கணிப்பீடானது விலைக்கழிவு வீதங்கள், சொத்துக்கள் மீதான வருமதிகளின் எதிர்பார்க்கப்பட்ட வீதங்கள், எதிர்கால சம்பள உயர்வுகள், முதிரிச்சியடையும் வீதங்கள், எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புக்கள் ஆகியவை தொடர்பில் ஊகங்களை உலுவாக்குவதில் ஈடுபடுகின்றது. கணிப்பீட்டின் சிக்கல்தன்மை மற்றும் நெடுங்கால தன்மை காரணமாக அவ்வாறான கணிப்பீடுகள் உறுதியற்றதன்மைக்கு உட்படுவதுடன், கடப்பாடுகள் இக்கணிப்பீடுகள் மற்றும் ஊகங்களின் மாற்றங்களுக்கு கடுமையாக உட்படுவதாக உள்ளது. நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் குறிப்பு இல 12இல் கணிப்பீடுகளில் பயன்படுத்தப்படும் முக்கியமான ஊகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 2.15.3 குறுங்கால ஊழியர் நன்மைகள்

குறுங்கால ஊழியர் நன்மைக் கடப்பாடுகள் ஊழியர்களால் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பாக செலுத்தவதற்கு எதிர்பார்க்கப்படும் தள்ளுபடியற்ற தொகையின் அடிப்படையில் அளவிடப்படும்.

## 2.16 ஏற்பாடுகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்

தொழிற்படு செலவினங்களுக்கான ஏற்பாடுகள் கடந்த நிகழ்வொன்றின் காரணமாக நடப்பு சட்டரீதியான மற்றும்ஆக்கபூர்வமான கடப்பாட்டினை தாபனம் கொண்டிருக்கும் போதும் தாபனத்தால் வேண்டப்படும் பொருளாதார வளங்களின் வெளிப்பாய்ச்சல் மற்றும் தொகைகள் நம்கமான முறையில் மதிப்பீடு செய்யப்படும் என்பது சாத்தியமானகும் போதும் இனங்காணப்படும்.

ஏற்பாடுகள் நடப்புக் கடப்பாடுகளுடன் தொடர்புபட்ட இடர்கள் மற்றும் ஐயப்படுகள் உட்பட அறிக்கையிடும் நாளில் காணப்படும் மிகவும் நம்பகமான ஆதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு நடப்பு கடப்பாடுகளைத் தீர்ப்பதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவினங்களில் அறவிடப்படும் .

எல்லா எதிர்பாரா பொறுப்புக்களும் வளங்களின் வெளிப்பாய்ச்சலின் சாத்தியப்பாடு இல்லாதவிடத்து, நிதிக்கூற்றுக்களின் ஒரு குறிப்பாகத் தெரிவிக்கப்படும்.

## 2.17 வருவாயை இனங்காணல்

வருவாய் தேறிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகளில் (VAT) தெரிவிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மீதான கிடைக்கவேண்டிய தொகையைப் பிரதிபலிப்பதுடன், கிடைக்கப் பெற்ற அல்லது கிடைக்க வேணடியவை மீதான நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றது. வருவாய் தொகையை நம்பகமான முறையில் அளவிட முடிகின்ற போதும் தாபனத்திற்கு எதிர்கால பொருளாதார நன்மைகள் கிடைக்கும் சாத்தியம் உள்ள போதும் தாபனம் வருவாயை இனங்காண்கின்றது.

வருவாயை உருவாக்கக்கூடிய முக்கியமான வகையினங்களை இனங்காண்பதற்கு பின்வரும் வருவாய் இனங்காணல் பிரமாணங்களை தாபனம் கவனத்திற் கொள்கின்றது.

### 2.17.1 பொருட்களின் விற்பனை

பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் உரிய எல்லா இடர்கள் மற்றும் இலாபங்களை வாடிக்கையாளருக்கு ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் இனங்காணப்படுகின்றது.

### 2.17.2 வட்டி வருமானம்

வட்டி வருமானம் விளைபயன்மிக்க வரி முறைமையைப் பயன்படுத்தி இனங்காணப்படும்.

### 2.17.3 சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகள் என்பவற்றை அகற்றுவதால் ஏற்படும் இலாபம் மற்றும் நட்டங்கள்

அகற்றுகைகளால் ஏற்படும் இலாபங்ககள் மற்றும் நட்டங்கள் என்பன காவுகைத் தொகையுடன் விளைவுகளை ஒப்பிட்டு தீர்மானிக்கப்படுவதுடன், விபரமான வருமானக் கூற்றில் வகைப்படுத்தப்படும்.

## 2.18 செலவினங்கள்

தொழிற்பாடுகளின் இயக்கத்தினால் ஏற்படும் எல்லா செலவினங்களும் அறிக்கையிடும் கபலப்பிரிவிற்கான இலாபத்தை அடையும் வருமானதிற்கு கட்டணம் விதிக்கப்படும்.

## 2.19 அறிக்கையிடும் காலப்பகுதிக்கப் பின்னர் ஏற்படும் நிகழ்வுகள்

அறிக்கையிடும் காலப்பதியின் பின்னர் ஏற்படும் அனைத்த முக்கியமான நிகழ்வுகளும் கவனத்திற் கொள்ள வேண்டியதுடன், பொருத்தமான சரிப்படுத்தல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களுக்கான உரிய குறிப்புக்களில் காட்டப்படுதல் வேண்டும்.

## 2.20 பொறுப்புக்கள்

அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ள அனைத்து பொறுப்பக்களும் இனங்காண வேண்டியுள்ளதுடன்,நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

கனிய மணல் இருப்பினை ஆவணமாகப் பிணையம் வைத்து இலங்கை வங்கியிலிருந்து 100 மில்லியன் ரூபா மேலதிகப்பற்று வசதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வசதி ஐந்தொகை தினத்தில் உள்ளவாறு பயன்படுத்தப்படவில்லை.

## 2A. முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் கருத்துக்களும்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முகாமை சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினங்கள் ஆகியவை தொடர்பான இனங்காணல் மற்றும் அளவீடுகள் குறித்து பல கருத்துக்கள், மதிப்பீடுகள், ஊகங்கள் ஆகியவற்றைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

**2A.1** நிதிக்கூற்றுக்கள் மீத குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்துகையில் அவசியமான முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு.

### 2A1.1 பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களை இனங்காணல்

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களை எந்தளவில் இனங்காணலாம் என்பது பயன்படுத்தக் கூடிய பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களுக்கு எதிராக எதிர்கால வரி விதிக்கக் கூடிய வருமானத்தின் சாத்தியக்கூறின் மத்ப்பீட்டு அடிப்படையில் உள்ளது.

**2A.2** சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினங்கள் ஆகியவை தொடர்பான இனங்காணல் மற்றும் அளவீடுகளில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் மதிப்பீடுகள், ஊகங்கள் குறித்து தகவல்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன:

### 2A.2.1 பெறுமானத் தேய்வு கொண்ட சொத்துக்களின் பயன்மிகு ஆயுட் காலம்

அறிக்கையிடும் ஒவ்வொரு காலப்பகுதியிலும் முகாமை அதன் பெறுமானம் தேய்வடையக் கூடிய சொத்துக்களின் பயன்மிகு ஆயுட் காலத்தின் மதிப்பீட்டினை சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார பயன்பாட்டின் அடிப்படையில் மீளாய்வு செய்கின்றது. குறிப்பிட்ட சில கணினி மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப கருவிகளை மாற்றுவதன் மூலமாக ஏற்படக் கூடிய தொழில்நுட்பங்களின் வழக்கற்று போதல் நிலைமை காரணமாக இம்மதிப்பீடுகளில் நிச்சயமற்ற தன்மை ஏற்படலாம்.

### 2A.2.2 நிலையான நன்மைகள் திட்டம்

நிலையான நலன்மைகள் திட்ட கடப்பாடுகளின் நடப்புப் பெறுமதி பல ஊகங்களைக் கையாண்டு நெறிப்படுத்தப்பட்ட அலகுப் பற்று முறைமையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் பல காரணிகளில் தங்கியுள்ளது. கழிவு வீதம் உட்பட நிலையான நன்மைகள் திட்டத்திற்கான தேறிய செலவு மற்றும் கடப்பாடு ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் ஊகங்கள் பயன்படுத்தப்படும். இவ்வூகங்களில் ஏற்படும் ஏதேனும் மாற்றம் நிலையான நன்மைகள் கடப்பாட்டின் காவுகைத் தொகையில் பாதிப்பை ஏற்படுத்தும்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|

## குறிப்பு 03 வருவாய்

| | | |
|---|---|---|
| ரூட்டைல் | 91,792,400 | 296,626,053 |
| இல்மனைற்று | 283,964,199 | 279,308,542 |
| சர்க்கோன் | 78,393,152 | 157,739,627 |
| Hi.Ti.இல்மனைற்று | 53,901,154 | 74,802,628 |
| காந்தமல்லா கழிவுகள் | 1,157,136,561 | --------- |
| இரும்புக் கனிமம் | ---------- | 40,788 |
| சுத்திகரிக்கப்படா சர்கோன் | ---------- | 411,287,100 |
| சுருள் நுண் மண் | 22,891,647 | ----------- |
| | 1,688,079,113 | 1,219,804,738 |

## குறிப்பு 03 A வருவாய்

| | | |
|---|---|---|
| ஏற்றுமதி விற்பனை | 1,444,897,849 | 1,219,582,032 |
| உள்நாட்டு விற்பனை | 243,181,264 | 222,706 |
| | 1,688,079,113 | 1,219,804,738 |

## குறிப்பு 04 விற்பனைச் செலவுகள்

| | | |
|---|---|---|
| ரூட்டைல் | 31,842,973 | 80,719,006 |
| இல்மனைற்று | 254,435,525 | 117,398,360 |
| சர்க்கோன் | 18,880,618 | 43,241,890 |
| Hi.Ti. இல்மனைற்று | 144,202,750 | 118,027,118 |
| காந்தமல்லாகழிவுகள் | 285,263,255 | ---------- |
| இரும்புக் கனிமம் | ---------- | 52,963 |
| சுத்திகரிக்கப்படா சர்கோன் | ---------- | 166,162,905 |
| சுருள் நுண் மண் | 131,790,627 | ---------- |
| | 866,415,748 | 525,602,242 |

## குறிப்பு 05 ஏனைய தொழிற்பாட்டு வருமானம்

| | | |
|---|---|---|
| செலாவணி இலாபம் | ---------- | 10,809,563 |
| தாமதக் கட்டணங்களிலிருந்து வருமானம் | 63,950,108 | 9,766,548 |
| சொத்துக்களின் விற்பனை மீதான இலாபம் | 1,977,103 | ---------- |
| | 65,927,211 | 20,576,111 |

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|---|

## குறிப்பு 06 நிதிசார் வருமானம்

| | | |
|---|---|---|
| பணிக்கொடை நிதிய முதலீடுகள் மீதான வட்டி | 260,397 | 256,827 |
| பொது முதலீடுகள் மீதான வட்டி | 27,223,468 | 6,011,587 |
| அலுவலர் கடன் மற்றும் ஏனைய வருமானம் மீதான வட்டி | 6,942,974 | 15,245,445 |
| வீடமைப்புக் கடன் மீதான வட்டி– HDFC | 2,371,178 | 1,750,594 |
| அந்நிய செலாவணி கணக்கு மீதான வட்டி | 249,977 | 78,826 |
| S.R.M.C.L. கடன் மீதான வட்டி | 2,500,000 | 2,500,000 |
| பறிமுதலான விலைமனு வைப்புக்கள் | 30,088,890 | 9,703,890 |
| | 69,636,884 | 35,547,169 |

## குறிப்பு 07 நடைமுறை வருமான வரி செலவினங்கள்

| | | | |
|---|---|---|---|
| வருடத்திற்கான ஏற்பாடு | 7.1 | 28,500,000 | ------- |
| கடந்த வருடத்திற்கான சீராக்கல்கள் | | -------- | ------- |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு | 7.2 | 17,484,819 | (1,882,404) |
| | | 45,984,819 | (1,882,404) |

## குறிப்பு 7.1 வருமான வரி செலவினங்களின் இணக்கம்

| | | |
|---|---|---|
| வரிக்கு முன்னரான இலாபம் | 502,754,508 | 327,609,173 |
| வரிக்கு அனுமதிக்கமுடியாத மொத்தச் செலவினங்கள் | 227,300,745 | 120,490,554 |
| வரிக்கு அனுமதிக்கப்பட்ட மொத்தச் செலவினங்கள | (203,283,830) | (254,462,044) |
| ஏனைய மூலங்களுக்கான மொத்த வருமானம் | (39,547,993) | (25,843,279) |
| **ஆண்டிற்கான வரி விதிக்கக்கூடிய வியாபாரம் இலாபம்/(நட்டம்)** | **487,223,430** | **167,794,404** |
| வரிக்கு பொறுப்பான ஏனைய வருமானம் | 39,298,017 | 25,764,453 |
| **மொத்த நியதிச்சட்ட வருமானம்** | **526,521,447** | **193,558,857** |
| பிரிவு 32இன் கீழ் கழித்தல் | (118,083,423) | (59,341,234) |
| **மதிப்பிடக்கூடிய வருமானம்** | **408,438,024** | **134,217,623** |
| தகுதிபெறும் கொடுப்பனவுகள் | (171,381,869) | (134,219,688) |
| **வரிவிதிக்கக்கூடிய வருமானம்** | **237,056,155** | **(2,065)** |
| 12%இல் நடப்பு வருமான வரி செலவினங்கள் | 28,446,738 | (248) |
| கிட்டிய தொகைக்கான முழுப் பெறுமானம் | 28,500,000 | ----- |
| | -------- | ----- |

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|
| **குறிப்பு 7.2 பிற்போடப்பட்ட வரி செலவினங்கள்** | | |
| தற்காலிக வேறுபாட்டின் மூலம் மற்றும் மாற்றம் | 17,484,819 | (1,882,404) |

## குறிப்பு 08 பங்கொன்றிற்கான சாதாரண வருவாய்

பங்கொன்றிற்கான சாதாரண வருவாய், ஆண்டிற்குள் சாதாரண பங்குகளின் நிறையளிக்கப்பட்ட சராசரி தொகையினால் சாதாரண பங்குதாரர்களுக்கு பகிரக்கூடிய தேறிய இலாபத்தை வகுத்தலின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| சாதாரண பங்குதாரர்களுக்கு பகிரக்கூடிய தே. இலாபம் | 456,769,689 | 329,491,578 |
| ஆண்டிற்குள் வழங்கப்பட்ட சாதாரண பங்குகளின் நிறையளிக்கப்பட்ட சராசரி தொகை | 80,000,000 | 80,000,000 |
| **பங்கொன்றிற்கான சாதாரண வருவாய் (ரூபா)** | 5.71 | 4.12 |

## குறிப்பு 09 சொத்து, பொறித்தொகுதி, கருவிகள்

| விபரம் | 2015.01.01ஆந் திகதியில் உள்ளவாறு | சேர்மானங்கள் | அகற்றுகைக ள்/சரிப்படுத் துகைகள் | 2015.12.31ஆந் திகதியில் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| இறையிலி நிலம் | 3,029,245 | -------- | ------ | 3,029,245 |
| வேலைத்தள அபிவிருத்தி | 41,534,837 | -------- | ------ | 41,534,837 |
| கட்டடங்கள் | 105,906,308 | 397,300 | ------ | 106,303,608 |
| பொறித்தொகுதியும் இயந்திராதிகளும் | 522,820,568 | 106,793,846 | ------ | 629,614,415 |
| கருவிகளும் சாதனங்களும் | 43,748,019 | 1,961,885 | 728,276 | 44,981,627 |
| தளபாடங்கள்,பொருத்திகள், கருவிகள் | 25,376,326 | 1,986,651 | 149,092 | 27,213,885 |
| மோட்டார் வாகனங்கள் | 141,610,782 | 36,770,889 | ------ | 178,381,671 |
| நீர் வழங்கல் திட்டம் | 14,694,456 | -------- | ------ | 14,694,456 |
| மிதவைப் படகு | 10,931,234 | -------- | ------ | 10,931,234 |
| கணினி வன்பொருள் | 17,468,255 | 567,122 | 1,230,728 | 16,804,649 |
| | 927,120,030 | 148,477,693 | 2,108,096 | 1,073,489,627 |
| **பெறுமானத் தேய்வு** | | | | |
| வேலைத்தள அபிவிருத்தி | 6,547,874 | 2,058,926 | ------ | 8,606,800 |
| கட்டடங்கள் | 53,323,970 | 3,044,505 | ------ | 56,368,475 |
| பொறித்தொகுதிம் இயந்திராதிகள் | 267,184,943 | 42,949,359 | ------ | 310,134,302 |
| கருவிகளும் சாதனங்களும் | 25,424,067 | 3,176,416 | 669,580 | 27,930,903 |
| தளபாடங்கள்,பொருத்திகள், கருவிகள் | 11,226,769 | 2,137,884 | 143,473 | 13,221,180 |
| மோட்டார் வாகனங்கள் | 122,165,395 | 19,650,540 | ------ | 141,815,935 |
| நீர் வழங்கல் திட்டம் | 14,538,854 | 49,603 | ------ | 14,588,457 |
| மிதவைப் படகு | 10,005,586 | 115,105 | ------ | 10,120,691 |
| கணினி வன்பொருள் | 13,609,922 | 2,044,311 | 1,230,713 | 14,423,520 |
| | 524,027,380 | 75,226,649 | 2,043,766 | 597,210,263 |
| தேறிய காவுகைப் பெறுமதி | 403,092,650 | -------- | --------- | 476,279,363 |
| முடிவுபெறாத மூலதன வேலை | 111,056,344 | 192,226,654 | --------- | 303,282,999 |
| | 514,148,994 | 192,226,654 | --------- | 779,562,362 |

09.1 நிதியாண்டின் போது தாபனத்தின் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் கருவிகளுக்கான கூட்டல் 16,256,251/= - (9,215,055 - 2014) ஆகும்.

09.2 தாபனத்தின் காணி மற்றும் கட்டடங்கள் தொடர்பிலான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

| **சொத்து** | **காணியின் அளவு** | **கட்டடத்தின் அளவு** | **செலவு** |
|---|---|---|---|
| கோக்கிளாய் காணி | | | 2,482,646 |
| புல்மோட்டை தொழிற்சாலை | | | 540,448 |
| | | | 3,023,094 |

## குறிப்பு 10 குத்தகைச் சொத்துக்கள்

| விபரம் | 2015.01.01ஆந் திகதியில் உள்ளவாறு | சேர்மானங்கள் | அகற்றுகைகள்/சரிப்படுத்துகைகள் | 2015.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| **செலவு** | | | | |
| குத்தகைக் காணி | 24,068,800 | 153,534 | --- | 24,222,334 |
| **கடன் தீர்ப்பனவு** | | | | |
| குத்தகைக் காணி | 1,288,938 | 456,943 | --- | 1,745,882 |
| **தேறிய காவுகைப் பெறுமதி** | 22,779,862 | ------ | --- | 22,476,452 |

**10.1** 2015 மே 5ஆந் திகதி தாபனம் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து 30 வருட கால குத்தகைக்கு பெற்றுக்கொண்ட காணி குத்தகைக் காலபிரிவிற்குள் தவணைமுறைக் கடன் கரைப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. எனினும், முன்னைய அளிக்கையிடும் திகதியில் உள்ளவாறு நிலுவை மதிப்பிறக்கஞ் செய்யப்பட்டது.

## குறிப்பு 11 அருவச்சொத்துக்கள்

| விபரம் | 2015. 01. 01 ஆந் திகதியில் உள்ளவாறு | சேர்மானங்கள் | அகற்றுகைகள்/சரிப்படுத்துகைகள் | 2015 .12. 31 ஆந் திகதியில் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| **செலவினம்** | | | | |
| கணினி மென்பொருள் | 3,474,719 | 17,500 | --- | 3,492,219 |
| **கடன் தீர்ப்பனவு** | | | | |
| கணினி மென்பொருள் | 2,896,106 | 337,863 | --- | 3,233,969 |
| **தேறிய காவுகைப் பெறுமதி** | 578,613 | ----- | --- | 258,250 |

**திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது**

## குறிப்பு 12 பிற்போடப்பட்ட வரி விதிப்பு

| | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| ஜனவரி 01ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை | 14,616,137 | 16,498,541 |
| வருமானக் கூற்றுக்கான கட்டணம் | 17,484,819 | (1,882,404) |
| ஆண்டிற்குள் இனங்காணப்பட்ட சொத்துக்கள் | -------- | -------- |
| திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை | 32,100,956 | 14,616,137 |

**திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது**

## குறிப்பு 12A பிற்போடப்பட்ட வரி பொறுப்பு

| | காவுகைத் தொகை | வரி அடிப்படை | தற்காலிக வேறுபாடு 2015 | தற்காலிக வேறுபாடு 2014 |
|---|---|---|---|---|
| PPE மீதான முதலீட்டு முற்கொடுப்பனவில் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | 499,014,066 | 164,275,557 | 334,738,508 | 188,223,230 |
| ஓய்வூதிய நலன்கள் பொறுப்பு மீதான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | (67,657,864) | ---------- | (67,657,864) | (66,454,553) |
| | | | 267,080,644 | 121,768,677 |

## குறிப்பு 12B பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு

| | காவுகைத் தொகை | வரி அடிப்படை | தற்காலிக வேறுபாடு 2015 | தற்காலிக வேறுபாடு 2014 |
|---|---|---|---|---|
| PPE மீதான முதலீட்டு முற்கொடுப்பனவில் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | 334,738,508 | 99.88* 12% | 40,120,418 | 22,582,270 |
| | 334,738,508 | 0.12* 28% | 112,472 | 10,541 |
| | | | 40,232,890 | 22,592,811 |
| ஓய்வூதிய நலன்கள் பொறுப்பு மீதான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள | 67,657,864 | 99.88* 12% | 8,109,201 | 7,972,951 |
| | 67,757,864 | 0.12* 28% | 22,733 | 3,721 |
| | | | 8,131,934 | 7,976,673 |
| **தேறிய பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு** | | | 32,100,956 | 14,616,137 |

**திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது 2015 ரூபா 2014 ரூபா**

## குறிப்பு 13 முற்பணம்

| | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| வரை. அரசாங்க வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் | 500,000,000 | 500,000,000 |
| அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு கடன் | 25,000,000 | 25,000,000 |
| ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்கு கடன் | 15,000,000 | 15,000,000 |
| தேசிய கடுதாசி கம்பனி லிமிடட்டிற்கு கடன் | 5,000,000 | 5,000,000 |
| கிடைக்கவேண்டிய வரி | 9,921,448 | 7,421,448 |
| | 554,921,448 | 552,421,448 |

| டிசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| **குறிப்பு 14 ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு மீதான முதலீடு** | | |
| ஜனவரி 1ஆந் திகதியில் உள்ளவாறு மீதி | 66,454,553 | 45,598,665 |
| தற்போதைய சேவை செலவினம் | 3,366,720 | 3,719,301 |
| வட்டி செலவு | 7,150,510 | 5,266,646 |
| | 76,971,783 | 54,584,612 |
| வருடத்தில் செலுத்தப்பட்ட பணிக்கொடை | (13,187,595) | (6,798,875) |
| காப்புறுதி (இலாபங்கள்)/ நட்டங்கள் | 3,873,676 | 18,668,816 |
| | 67,657,864 | 66,454,553 |
| திட்டமிடப்பட்ட சொத்துக்களின் நியாயமான பெறுமதி 14 A | (4,106,537) | (3,872,179) |
| டிசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு மீதி | 63,551,327 | 62,582,374 |

## குறிப்பு 14 A திட்டமிடப்பட்ட சொத்துக்களின் நியாயமான பெறுமதி

| | | |
|---|---|---|
| அரசாங்க நிறுவன தற்காலிக மிகை நிதியம் | 4,106,537 | 3,872,179 |

## குறிப்பு 14 B திட்டமிடப்பட்ட சொத்துக்களின் நியாயமான பெறுமதி

குறிக்கப்பட்ட நலன்கள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியைக் கணிப்பதற்கு தீர்மானிப்பதில் பயன்படுத்தப்பட்ட முக்கியமான காப்பீட்டு ஊகங்கள் உள்ளடங்குகின்றன.

| | 2015 | 2014 |
|---|---|---|
| விலைக்கழிவு வீதம் | 10.76 % | 10.00 % |
| சம்பள உயர்வு வீதம் | ----- | 1.87 % |
| இளைப்பாறும் வயது | 60 ஆண்டுகள் | 60 ஆண்டுகள் |
| பணிக்குழாம் மொத்த பரிமாற்ற வீதம் | | |
| 55 வரை | 1.00 % | 2.00 % |
| அதன் பிறகு | 0.00 % | 0.00 % |

பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 30(1) இன் அடிப்படையில் வருடாந்த சம்பள உயர்வு வீதங்கள் உள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| **குறிப்பு 15 பொருட்பதிவேடுகள்** | குறிப்பு | | |
| நுகர்வுப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்- பொறித்தொகுதி | | 205,816,125 | 203,198,296 |
| மூலப் பொருட்கள் மற்றும் இடைநிலை உற்பத்திகள் | | 5,245,953 | 7,519,207 |
| முடிவுப் பொருட்கள் | | | |
| - இல்மனைற்று | | 136,803,434 | 162,853,095 |
| - ரூடைல் | | 23,794,882 | 12,761,387 |
| - சர்கோன் | | 5,203,489 | 6,555,211 |
| - பரிகரிக்கப்படாத சர்கோன் | | --------- | 11,239,707 |
| - உயர் டைடேனியம் இல்மனைற்று | | 13,027,816 | 118,948,803 |
| - பரிகரிக்கப்படாத மொனாசைட்டு | | 7,722,677 | 7,104,104 |
| - ஈர மேசை நடுவண்கள் | | 228,160,304 | 80,545,763 |
| - சுருள் நுண் மண் | | 55,999,529 | 149,461,452 |
| - இரும்புக் கனிமம் | | 3,786,564 | 971,619 |
| - காந்தமல்லா கழிவுகள் | | 113,570,689 | 198,180,125 |
| நானாவிதப் பதார்த்தங்கள் | | 1,026,665 | 1,419,619 |
| | | 800,158,127 | 960,758,388 |
| **குறிப்பு 16 குறுங்கால நிதிச் சொத்துக்கள்** | | | |
| திறைசேரி உண்டியல்கள் | | 205,000,000 | 359,564,354 |
| கடன்பட்டோர் வட்டி | | 3,640,110 | 1,004,779 |
| | | 208,640,110 | 360,569,133 |
| **குறிப்பு 17 முற்பணங்களும் வைப்புக்களும்** | | | |
| முற்பணங்களும் வைப்புக்களும் | | 14,414,611 | 95,354,664 |
| | | 14,414,611 | 95,354,664 |
| **குறிப்பு 18 முன்செலுத்திய செலவினங்கள்** | | | |
| முன்செலுத்திய செலவினங்கள் | | 35,444,787 | 33,621,383 |
| | | 35,444,787 | 33,621,383 |
| **குறிப்பு 19 ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கிடைக்க வேண்டிய VAT | | 109,489,716 | 89,461,390 |
| நானாவித கடன்பட்டோர் | | 1,000 | 1,000 |
| வீடமைப்புக் கடன் -HDFC | | 81,222,979 | 72,818,877 |
| ஏனைய கடன்பட்டோர் | | 27,025,170 | 13,795,346 |
| அலுவலர்க்கான கடன் மற்றும் முற்பணம் | | 112,570,332 | 64,082,136 |
| | | 330,309,197 | 240,158,749 |
| கழிக்குக: பெறுமானத் தேய்வு | 19.1 | (224,982) | (224,982) |
| | | 330,084,215 | 239,933,767 |

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|

## குறிப்பு 19.1 பெறுமானத் தேய்வு

வர்த்தக வருமதிகளுக்கான பெறுமானத் தேய்வின் அசைவுகள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| ஜனவரி 1ஆந் திகதியில் உள்ளவாறு | 224,982 | 437,482 |
| வருடத்தில் கிடைக்க வேண்டியவை | ------ | (212,500) |
| **வருடத்தில் கிடைத்தவை** | **224,982** | **224,982** |

## குறிப்பு 20 காசும் காசுக்கு சமமானவைகளும்

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி – வெளிநாட்டு நாணய – ந.க073449850 | 17,221,963 | 30,318,372 |
| இலங்கை வங்கி – கூட்டுக் கிளை –ந.க.0000000931 | 572,561 | 437,841 |
| இலங்கை வங்கி – பஸார் கிளை, திருகோணமலை - ந.க. 00002367534 | 170,789 | 311,022 |
| ஹற்றன் நஷனல் வங்கி, கருவாக்காடு கிளை ந.க.076010004078 | 257,329 | 281,043 |
| மக்கள் வங்கி, புல்மோட்டை -ந.க.352-1001-5-0000244 | 53,261 | 233,030 |
| கையிலுள்ள பணம் - புல்மோட்டை | 161,151 | 167,881 |
| சில்லறைப் பணம் - தலைமை அலுவலகம் | 20,000 | 20,000 |
| | 18,457,054 | 31,769,189 |

## குறிப்பு 21 குறிப்பிடப்பட்ட மூலதனம்

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட மற்றும் முழுமையாகச் செலுத்தப்பட்ட 80,000,000 சாதாரண பங்குகள் | 800,000,000 | 800,000,000 |

## குறிப்பு 22 ஏனைய ஒதுக்குகள்

| | | |
|---|---|---|
| மிதவைப்படகு காப்புறுதி ஆழ் நிதிய முதலீடு | 111,000,000 | 111,000,000 |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகளை பதிலீடு செய்தல்/தரமுயர்த்துதல் ஆகியவற்றுக்கான ஆழ் நிதிய முதலீடு | 706,346,958 | 706,346,958 |
| தலைமை அலுவலகக் கட்டட ஆழ் நிதிய முதலீடு | 171,149,673 | 171,149,673 |
| ஊழியர் நஷ்டஈட்டு ஆழ் நிதிய முதலீடு | 10,246,238 | 10,246,238 |
| சுனாமி பழுதுபார்த்தலுக்கான ஆழ் நிதிய முதலீடு | 18,801,474 | 18,801,474 |
| | 1,017,544,343 | 1,017,544,343 |

## குறிப்பு 23 வைத்திருக்கப்படும் வருவாய் / (நட்டம்)

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 163,628,725 | (133,194,037) |
| திறைசேரிக்கான பங்கிலாபம் | (158,500,000) | (14,000,000) |
| ஆண்டிற்கான இலாபம் அல்லது/ (நட்டம்) | 452,896,012 | 310,822,761 |
| | 458,024,737 | 163,628,724 |

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|

## குறிப்பு 24 வருமான வரி பொறுப்புக்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி 1ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை | (16,655,430) | 13,028,588 |
| ஆண்டிற்கான ஏற்பா | 28,500,000 | --------- |
| ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | (3,000,000) | 3,626,842 |
| தேசிய வரி கடன்கள் | (2,748,386) | --------- |
| திசெம்பர் 31ஆந் திகதியில் நிலுவை | 6,096,184 | 16,655,430 |

## குறிப்பு 25 வர்த்தகம் மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர்

| | | |
|---|---|---|
| கொள்வனவாளரிடமிருந்து முற்பணம் | 107,569,661 | 524,673,039 |
| நானாவித கடன் கொடுத்தோர் | 10,054,748 | 17,159,513 |
| விலைமனு வைப்புக்கள் | 2,929,526 | 85,738,402 |
| தடுத்துவைக்கப்பட்ட பணம் | 17,895,201 | 13,693,040 |
| அலுவலர் சம்பளங்கள் | 8,777,474 | 5,839,884 |
| செலுத்த வேண்டிய W.H.T. | 163,066 | 163,066 |
| செலுத்த வேண்டிய பணிக்கொடை | 108,728 | 108,728 |
| செலுத்த வேண்டிய பங்கிலாபம் | 158,500,000 | 14,000,000 |
| வியாபார கடன் கொடுத்தோர் | 931,700 | 931,700 |
| | 306,930,104 | 662,307,372 |

## குறிப்பு 26 ஏற்பாடுகள் மற்றும் சேரும் செலவினங்கள்

| | | |
|---|---|---|
| தலைமை அலுவலகம் | 27,274,867 | 7,074,464 |
| புல்மோட்டை | 52,894,897 | 28,039,645 |
| | 80,169,764 | 35,114,109 |

## குறிப்பு 27 குறுங்கால கடன்

| | | |
|---|---|---|
| குறுங்கால கடன் | ------ | 72,644,277 |
| செலுத்தவேண்டிய வட்டி | ------ | 153,534 |
| | ------ | 72,797,811 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## குறிப்பு 28 சம்பந்தபட்ட தரப்பினரின் வெளிப்படுத்தல்கள்

### 28.1 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24இற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரின் வெளிப்படுத்தல்களின் படி, முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் தாபனத்தின் செயற்பாடுகள், திட்டமிடல், வழிகாட்டல் கட்டுப்படுத்தல் ஆகியவை தொடர்பாகப் பொறுப்புக்களைக் கொண்டுள்ளனர். அதனால், பணிப்பாளர் சபை (நிறைவேற்று அதிகாரங் கொண்ட அல்லது நிறைவேற்று அதிகாரங் கொண்டிராத பணிப்பாளர்கள் உட்பட)முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.
முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு:

| | 2015திசெம்பர் 31 | 2014திசெம்பர் 31 |
|---|---|---|
| முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மீதான செலவுகள் | 1,792,384 | 2,141,250 |
| முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணம் | இல்லை | இல்லை |

### 28.2 சம்பந்தப்பட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

முக்கியமான சம்பந்தப்பட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் குறித்து விபரங்கள் பின்வருமாறு:

| தாபனத்தின் பெயர் | தொடர்பு | கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | பெறுமதி | 2014 |
|---|---|---|---|---|
| நில அமைப்பு மற்றும் அகழ்வாராய்ச்சிப் பணியகம் | சம்பந்தப்பட்ட வர்த்தகம் | செலுத்தப்பட்ட பங்குவீத உரிமை | 118,083,423 | 59,341,234 |
| ஜனத்தா பெருந்தோட்ட அபிவிருத்தி சபை | சம்பந்தப்பட்ட வர்த்தகம் | வழங்கப்பட்ட கடன் | 15,000,000 | 15,000,000 |
| தேசிய கடுதாசி கூட்டுத்தாபனம் | சம்பந்தப்பட்ட வர்த்தகம் | வழங்கப்பட்ட கடன் | 5,000,000 | 5,000,000 |
| மத்திய வங்கி | சம்பந்தப்பட்ட வர்த்தகம் | ஈட்டப்பட்ட வட்டி | -------------- | 5,851,058 |
| | | வைப்புக்களை மீளப்பெறல் | 1,303,300,000 | 973,305,685 |

## குறிப்பு 29 அறிக்கையிடும் கால முடிவின் பின்னர் ஏற்படக்கூடிய நிகழ்வுகள்

இந் நிதிக் கூற்றுக்களில் பொருத்தமான சரிப்படுத்தல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்ய வேண்டிய எவ்வித நிகழ்வும் நிதி நிலைமைக் கூற்றுத் திகதிக்கு பின்னர் ஏற்படவில்லை.

## குறிப்பு 30 கடப்பாடுகள்

கனிய மணல் இருப்பினை ஆவணமாகப் பிணை வைத்து இலங்கை வங்கியிடமிருந்து 100 மில்லியன் ரூபா மேலதிகப்பற்று பெறப்பட்டது. ஐந்தொகைத் தினத்தில் உள்ளவாறு இவ்வசதி பயன்படுத்தப்படவில்லை.

இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள்/ கருவிகள் ஆகியவற்றைப் பிணையாக வைத்து இயந்திரங்கள் மற்றும் கருவிகளை இறக்குமதி செய்வதற்கு இலங்கை வங்கியிடமிருந்து 550 மில்லியன் ரூபா/4,200,000 அமெரிக்க டொலர் கடன் வசதி பெறப்பட்டுள்ளது. 2015 ஜனவரி 07ஆந் திகதி அதன் வட்டியுடன் முழுமையாகத் தீர்க்கப்பட்ட நிலையில் 15.12.31ஆந் திகதியன்று 562,799.29 அ.டொ. இக்கடன் நிலுவையாக உள்ளது.

## குறிப்பு 31 எதிர்பாரா நிகழ்வுகள்

அறிக்கையிடும் கால முடிவைத் தொடர்ந்து இங்கு நிதிக் கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கோ அல்லது சரிப்படுத்தவோ அவசியமான தற்செயல் பொறுப்புக்கள் எதுவும் இல்லை.